ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 7	ஸர்வதாரி ௵ ஆவணி ௴	ஸஞ்சிகை 8

"அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

श्रीः

श्रीमते श्रीलक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[7-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

प्रभञ्जनतनयमङ्गलभाषितरञ्जितहृदयेन—ப்ரபஞ்ஜந ரென்னும் வாயுவின் புத்ரரான ஆஞ்ஜநேயர் பகவத் பக்தர்; ரஸிக ஶிரோமணி; மதுர வாக். 'मङ्गल' என்பது மங்களத்தை (கல்யாணத்தைச்) சொல்லும்.

"उच्चारयति कल्याणीं वाचं हृदयहारिणीम्"

என்ற ராமனுடைய ச்லாகா வசநத்தை 'मङ्गलभाषित' என்பதாலும், 'रञ्जितहृदय' என்பதாலும் ஸூசிக்கிறார். கிஷ்கிந்தா காண்டத்தை ஹநுமந் நாம ஸங்கீர்த்தநத்தோடு தொடங்குகிறார்.

तरणिसुतशरणागतिपरतन्त्रीकृतस्वतन्त्रकल्याण-வாயு ஸுதரைக் கூறியபிறகு, 'तरणि' என்னும் ஸூர்யனுடைய புத்ரராகிய ஸுக்ரீவனைப் பற்றிக் கூறுகிறார். ஸுக்ரீவன் செய்த ஶரணாகதி என்பதற்கும், ஸுக்ரீவனிடம் செய்த ஶரணாகதி என்பதற்கும் பொதுவாக இங்கே பத விந்யாஸம். 'நானும் ராமனும் ஸுக்ரீவனை ஶரண மடைந்தோம்'; 'வாநர ராஜனான இந்த ஸுக்ரீவனை இந்த ராகவன் ஶரணம் பற்றுகிறார்' என்பது லக்ஷ்மணன் வார்த்தை. 'உம்மோடு ஸக்யத்தை அபேக்ஷிக்கிறார்கள்' என்று ஹநுமான் லக்ஷ்மணன் அபிப்ராயமாக ஸுக்ரீவனிடம் கூறினார். ஶரணாகதிப் பேச்சை அவர் வெறும் நைச்ய வார்த்தையாக மதித்து, ஸ்நேஹாபிப்ராயத்தையே கூறினார். 'सुग्रीवः शरण्यः संश्रये' என்று ரிஷி, இருவருக்கும் அக்நி ஸாக்ஷியான ஸக்யத்தை மட்டும் கூறினார். ஶரணாகதி அக்நி ஸாக்ஷிகமா யிராது.

"तव प्रसादेन नृसिंह राघव
प्रियां च राज्यं च समाप्नुयामहम् ॥"

என்பது ஸுக்ரீவனுடைய கோருதல். 'भवितव्यप्रणताम्' என்று தயாஶதகம். ஸுக்ரீவன் ராகவ ப்ரஸாதத்தை ப்ரார்த்தித்தான். அதனால் அவனுக்கு ராகவன் தாமே வஶமானார். இங்கு, ஸூர்ய புத்ரனோடு அக்நி ஸாக்ஷிகமான ஸக்யத்தை ஸூசித்தார்.

विभुसहजसौहृदोदग्रनिबिडनिवेशित रावणरणरणकजनक अतनुतरशयि विहरण अतनुरकविवति हृदय विशालशिलातलदारण दारणशिलीमुखेन—இந்த்ர புத்ரனான வாலியும் ஸூர்ய புத்ரனான ஸுக்ரீவனும் இருவரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள். இருவரும் ராம ஸஹாயத்துக்காகவே தேவர்களால் பலம் கொடுத்து இந்த்ர ஸூர்ய அம்ஶத்தோடு

பிறப்பிக்கப் பட்டவர்கள். மூத்தவனான வாலி '𑌦𑌶𑌗𑍍𑌰𑍀𑌵𑌵𑌧𑍋𑌦𑍍𑌯𑌤𑌾𑌃' என்றபடி மற்ற வாநரரோடு சேர்ந்து ராவண வதத்தில் ஸஹாயம் செய்யவே உத்கோஷணம் செய்துகொண்டிருந்தான். அதற்கென்றே அவனுக்கு அதிக பலம் கொடுக்கப்பட்டது. ராவண யுத்தத்தில் வாநர ஸேனைத் தலைவனாயிருந்து போர் புரியவே பல மளிக்கப்பட்டவன். ராமன் அவனோடு ஸக்யம் செய்யாமல் ஸுக்ரீவனோடு ஸக்யம் செய்யவேண்டுவது என்? இதற்குப் பதில் உத்தரகாண்டம் 34-வது ஸர்க்கத்தில் காண்கிறது. அந்த ஸர்க்க வ்ருத்தாந்தத்தை இங்கே வர்ணிக்கிறார். வாலியோடு போர்புரிய விருப்பி ராவணன் தெற்கு ஸமுத்ரத்துக்குச் சென்றான். அவனைப் பிடிக்க எண்ணி, ஸந்த்யாவந்தநம் செய்துகொண்டிருந்த வாலியின் பின்புறம் ஶப்த மில்லாமல் நெருங்கினான் ராவணன்.

" 𑌕𑌕𑍍𑌷𑌾𑌵𑌲𑌮𑍍𑌬𑌿𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑍇𑌽𑌹𑌂 𑌮𑌹𑌾𑌰𑍍𑌣𑌵𑌾𑌨𑍍 ।
𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌰𑌿𑌂 𑌮𑌮𑌾𑌙𑍍𑌕𑌸𑍍𑌥𑌂 𑌸𑍍𑌰𑌂𑌸𑌦𑍂𑌰𑍁𑌕𑌰𑌾𑌮𑍍𑌬𑌰𑌮𑍍 ॥
𑌲𑌮𑍍𑌬𑌮𑌾𑌨𑌂 𑌦𑌶𑌗𑍍𑌰𑍀𑌵𑌂 𑌗𑌰𑍁𑌡𑌸𑍍𑌯𑍇𑌵 𑌪𑌨𑍍𑌨𑌗𑌮𑍍 ॥ "

என்று வாலி நினைத்தான். ['என் தோள் கமுக்கட்டையில் இவனைப் பிடித்து இறுக்கி மற்ற மூன்று ஸமுத்ரங்களுக்கும் ஆகாய மார்க்கமாகச் செல்வேன். என்னைப் பிடிக்கவந்த ஶத்ரு என் கமுக்கட்டையில் பத்து ஶிரங்களும் இருபது புஜங்களும் பருத்த தொடைகளுமாகத் தொங்கிக்கொண்டு வரும்படி, கருடன் பாம்பைத் தொங்கவிட்டுக்கொண்டு செல்வதுபோல் செல்வேன். அப்படி ராவணன் தொங்கும் காட்சியைப் பூமியி லுள்ளோர் பார்க்கட்டும்'] என்று இப்படிச் சொல்லிக்கொண்டு, தனக்குப் பின்புற மிருந்த ராவணனை முகம் திரும்பாமலே [பராங் முகமாகவே] வாலால் பிடித்துக் கமுக்கட்டையில் அடக்கிக்கொண்டு, தலைகீழாகத் தொங்கவிட்டுக்கொண்டு ஆகாயத்தில் பறந்தான். வழக்கம்போல் தன் ஸந்த்யாவந்தந க்ரியையை மற்ற மூன்று ஸமுத்ரங்களிலும் சென்று செய்து முடித்தான். காற்று மேகத்தைத் தள்ளிக்கொண்டு போவது போலவும், ஸூர்யன் மேகங்களால் தொடரப்பட்டு ஆகாயத்தில் போவது போலவும், வாலி ராவணனைத் தொங்கவிட்டுக்கொண்டு ஆயாஸ மின்றி ஆகாயத்திற் சென்றான். 'அம்பரம்' [வஸ்த்ரம்] தொங்கியதுபோல் தொங்கினனென்றும், துணிக்கு எப்படி தடுக்க ஶக்தியில்லையோ அதுபோலவே அவனுக்கும் தடுக்க ஶக்தியில்லை என்று ரஸம். '𑌵𑌿𑌭𑍋................𑌜𑌨𑌕'—இங்கு, ஸஹஸ்ர பாஹுவான அர்ஜுநன் தஶவதநனைத் தமநம் செய்து பிடித்துத் தன் மாஹிஷ்மதீ பட்டணத்துக்குக் கொண்டுபோனது வர்ணிக்கப்பட்டது.

" 𑌸 𑌤𑌂 𑌬𑌾𑌹𑍁𑌸𑌹𑌸𑍍𑌰𑍇𑌣 𑌬𑌲𑌾𑌦𑍍𑌗𑍃𑌹𑍍𑌯 𑌦𑌶𑌾𑌨𑌨𑌮𑍍 ।
𑌬𑌬𑌨𑍍𑌧 𑌬𑌲𑌵𑌾𑌨𑍍 𑌰𑌾𑌜𑌾 𑌬𑌲𑌿𑌂 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍋 𑌯𑌥𑌾 ॥ "

என்பது, '𑌦𑌶𑌵𑌦𑌨𑌦𑌮𑌨𑌕𑍍𑌷𑌮𑌦𑍋𑌃𑌸𑌹𑌸𑍍𑌰𑌭𑍁𑌜𑌨𑍃𑌪𑌤𑌿' என்ற ஒரு பதத்தால் கத்யத்தில் காட்டப்பட்டது. 'இதென்ன விந்தை! ஒரு தோளிடுக்கில் வாலி ராவணனை அடக்கிக்கொண்டு அநாயாஸமாய் நான்கு ஸமுத்ரங்களுக்கும் பறந்து சென்று தன் ஸந்த்யா க்ரியையை யதாக்ரமமாக முடித்தான்; இவன் புஜ மூலம் [கக்ஷம்] எவ்வளவு பெரிதாயிருக்கவேண்டும்!' என்னும் இந்த உத்தர காண்ட விஷயங்களை '𑌵𑌿𑌭𑍁𑌜𑌭𑍁𑌜𑌪𑍍𑌰𑍌𑌢𑌿𑌮𑌾' என்பதால் ஸூசிக்கிறார்.

‘ நிவிஷ நிவீடித ’—கைலேயங் கிரியைத் தூக்குகையில் அங்கே அழுத்தப்பட்டு வருந்தியதைக் காட்டிலும் வாலி கமுக்கட்டையில் அதிகமாய் அழுத்தப்பட்டு வருந்தினன். இப்படி வருந்தியவன் யாவனெனில்: உலகத்தை அழச் செய்யும் லோக ராவணன். ‘ ராவணோ லோகராவணঃ’ என்றபடி உலகத்திற்குப் பயத்தையும் ஹிம்ஸையையும் விளைவிக்கும் கொடியன். அந்த ராவணனுக்கும் ரண ரணகத்தை [வ்யஸநத்தை, துன்பத்தைச்] செய்தவன், அதோ ஸமரோத்யத விஹாரண சதுரனன் குரக்கரசன். ‘ கபிபதி ’ என்பதால், இத்தனை பலமும் இவனுக்கு ராம ஸஹாயத்துக்காக, ராமனுடைய வானரஸேனைத் தலைவனயிருப்பதற்கென்றே கொடுக்கப்பட்டது. ‘ ஸுக்ரீவ ஸசிவயோஃ ’ என்று மற்ற வானரங்களோடு இவனும் ராவணனைக் கொல்லக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தவன் ; ராமஸேனைத் தலைவன், ராம த்ரோஹியாய், ராம ஶத்ருவினிடம் அக்நி ஸாக்ஷிகமாய் ஸக்யம் (உடன்படிக்கை) செய்துகொண்டானே யென்று அகஸ்த்யர் வருத்தப்பட்டார். ‘ கொழுப்படக்கப்பட்ட ஶத்ருவோடு என் இப்படி யஜமாந த்ரோஹமாக ஸக்யம் ? ’ இவைகளெல்லாம் இங்கே ஸூசிக்கப்படுகின்றன. ஸேனைத் தலைவனே இப்படி எதிரியினிடம் ஸ்நேஹ ஒப்பந்தம் செய்ததற்கு அவன் தலையை வாங்குவது தான் உசித தண்டனை. துப்பாக்கிக் குண்டால் சுடுவதன் ஸ்தாநத்தில் பாணத்தினல் அவன் உயிரை வாங்கினது உசிதமே. இவனேடு போர் புரிய அவச்யமே யில்லே. ராவணன் ‘ கஹோ பலம் கஹோவீர்யம் ’ என்று ஸ்துதி செய்து ஸக்யத்தை ப்ரார்த்தித்ததும், வாலி உச்சி குளிர்ந்து ஏமாந்துபோய் எதிரியோடு ஸ்நேஹ ஒப்பந்தம் செய்து கொண்டான்.

ஸீதையைத் தூக்கிக்கொண்டு போனதும் கிஷ்கிந்தை மார்க்கமாக. அது தெரிந்தும் வாலி ஒன்றும் செய்யக்கூட வில்லே. 5-ம் அங்கத்தில் ‘ வாலிநோ தாஹம் ’ என்ற பத விவரணத்தில், வாலி வதம் யுக்த மென்பது விஸ்தாரமாக விவரிக்கப்பட்டுள்ளது. வாலி, தானே தன் குற்றம் தெரிந்து வெட்கி, ராமனிடம் வததத்தை விரும்பினன். புஜ மூலத்துக்கு இத்தனை பலம். அதுவே அவ்வளவு கெட்டியாயின், விசாலமான மார்பு எவ்வளவு கெட்டியாயிருக்கும்? மலேயினும் அவன் மார்பு கடிநம்.

ஹ்ருதய விஶாரண ஶிக்ஷா தக்ஷ தாரணதாருண ஶிலீமுகேந — ஸப்த ஸாலங்களேயும் கிரியையும் ரஸாதலத்தையும் பிளந்து திரும்பிவந்த பாணமான ராம பாணம் ஒன்றைத் தவிர, வேறென்றும் வாலியின் மார்பைப் பிளக்கமுடியாது. ‘வாலியின் ஹ்ருதயத்தை லக்ஷ்யமாக்கி ‘ பித்யதே ஹ்ருதயக்ரந்தி ’ என்று உபநிஷத் ஓதிய க்ரமத்தில் ஹ்ருதய க்ரந்தியைப் பிளந்து மோக்ஷம் அளித்ததையும் வ்யஞ்ஜநம் செய்கிறர்.

“ தத்ஸ்தம் தஸ்யவீரஸ்ய ஸ்வர்கமார்க ப்ரபாவநம் ।
ராமபாணாஸநாக்ஷிப்தம் ஆவஹத் பரமாம் கதிம் ॥ ”

ஸ்வர்க்கம் என்பது மோக்ஷத்தைக் குறிப்பது. அதுவே பரம கதி. ஜடாயுஸ்ஸுக்குப்போல் இவனுக்கும் மோக்ஷம். தாரக மந்த்ரமாகிய ‘ ராம ’ என்

னும் அக்ஷரங்களின் முத்ரையையுடைய பாணம் வாலியின் ஹ்ருதயத்தில் புகுந்து ஸம்ஸாரார்ணவதாரணம் செய்வித்துப் பரமகதி என்னும் மோக்ஷத்தை அடைவித்தது. *

[தொடரும்]

* "மும்மைசா லுலகுக் கெல்லா மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே யெழுமை நோய்க்கு மருந்தினை யிராம னென்னும்
செம்மைசேர் நாமந் தன்னைக் கண்களில் தெரியக் கண்டான்."

[இதன் பொருள்] ஸ்வர்க்கம் பூமி பாதாளம் என்று சொல்லப்படும் எல்லா உலகங்களுக்கும் முக்ய மந்த்ரமாக உள்ளதும், தன்னை ஜபிக்கின்றவர்களான அடியார்கட்குத் தம்மையே முழுவதும் கொடுக்கின்ற ஒப்பற்ற சிறந்த சொல்லாக உள்ளதும், தான் தனியாகவே இப்பிறப்பிலேயே எழுவகைப்பட்ட பிறப்புக்களாகிய நோய்களையெல்லாம் ஒழிப்பதற்கு மருந்தாக உள்ளதுமான 'ராம' என்கிற சிறப்புப் பொருந்திய திருநாமத்தைத் தனது கண்களினால் (தன் உடம்பில் தைத்துள்ள அந்த அம்பிலே) விளங்கப் பார்த்தான் வாலி.] பின்னர் 'வாலி யங்கிலே துறந்து வானுக் கப்புறத் துலக னானான்'— [வாலி தன் உடலை நீத்து மேலுலகங்கட் கெல்லாம் அப்பால் உள்ளதான முத்தி யுலகத்தை யடைந்தவனானான்.] என்னும் கம்பர் பணிப்பு இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

கோ. ஸ.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீநரஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

மதுராலாபம்

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர், M. A., வித்வான், L. T., திருவையாறு]

'ஸ்ரீ வைஷ்ணவனுக்கு வந்துற்ற பேராபத்தை யார் நினைக்கிறார்கள்? ஆபத்து வந்திருக்கிறதென்றால் செவி கொடுத்துக் கேட்பதுதான் யார்? இனிப்பாகப் பேசுவதும் வக்கணையாக எழுதுவதும் எளிது. கார்யத்திலன்றோ காட்டவேண்டும்?' என்று பலர் சொல்லுகிறார்கள். ந்யாயம். ஆபத்தை முதலில் நன்கு உணர்ந்து பிறகு ஒன்றுபட்டுப் பரிஹாரத்தில் இறங்கவேண்டும். துன்பத்தைத் துன்பமாகவே உணராவிட்டால், இடித்து இடித்து உரைக்கவேண்டியதும் ஒரு கடமையல்லவா? மஹநீயர்கள் மிகுந்த க்ஷமையுடன் அடியேனுடைய விண்ணப்பத்தைச் செவி சாய்ப்பாராக.

உலகெல்லாம் க்ஷேமமும் அமைதியும் சீரும் செல்வமும் பரவி, ஸ்ரீ புருஷோத்தமன் பெருமை உபய விபூதியிலும் ஓங்குவதற்கென்றே நிலவுகின்ற நம் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தமானது 'ஸர்வலோக ஹிதைஷிணி' என்பதில் தடையில்லை. ஸித்தாந்தத்தைக் காப்பாற்றுகிற மஹநீயர்கள் நமக்கு வந்துற்ற இரு பெரும் ஆபத்தை உணர்ந்து, அவற்றிலிருந்து பரிஹாரத்தைத் தேடவேண்டும்.

பிற மதங்கள் மெதுவாக நம் ஹிந்து மக்களை நம்மிடமிருந்து பிரிக்க ஆரம்பித்து வெற்றிபெற்று வருகின்றன. பதினைந்தாம் நூற்றாண்டிலே வீராட்டஹாஸத்துடன் மேனாடுகளில் படையெடுத்த மகமதிய மதம், பாரஸீகம் ஆப்ரிக்கா சிறிய ஆசியா இவற்றைக் கபளீகரித்து, ஐரோப்பாவையும் கைப்பற்ற

முயற்சித்து, ஸ்பெயின் நாட்டை ஆக்ரமித்தது. அந்த ஸமயம் கிரிஸ்தவ நாட்டினர் தம்முள் சண்டையிட்ட நிலையை ஒழித்து மகமதியரை ஒற்றுமையுடன் எதிர்த்து விரட்டித் தங்கள் கிரிஸ்தவ தர்மத்தைக் காப்பாற்றினர். 'வாளை எடுக்காதே' என்ற மதத்தை வாள் கொண்டே காப்பாற்றவேண்டி வந்தது. இந்தியாவை எட்டு ஒன்பதாம் நூற்றுண்டுகளில் கைவசப்படுத்தினர் மகமதியர். 'நம் வட நாட்டின் சீர்மை குலைந்து, ஆர்யாவர்த்தம் உபாதேய மல்லாத நிலையை அடைந்தது' என்று ஸ்வாமி தேசிகனே ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் துக்கிக்கிறுர். பிறகு வந்தனன் கிரிஸ்தவப் பாதிரி. ஹிந்து தர்மத்தில் ஒடுக்கப் பட்டவராகக் கருதப்படும் மாபெருங்கூட்டம் அவன் வசமாயிற்று. பள்ளர், பறையர், புலையர், ஒட்டர், தீயர் என்பவர் பெருவாரியாக அவன் தர்மத்தைத் தழுவினர். ஓர் புராதனக் கோட்டையைப் புகுவதற்கு விரும்புபவர் சுவரின் இடிந்த பாகத்தைப் பயன்படுத்தி உட்புகுவதுபோல், இந்தத் தாழ்ந்த ஜாதியினர் பல்லாயிரக் கணக்காகப் புதுமதத்தைத் தழுவினர். மாண்புடைய வீரராகிய மறவர், தேஹ வன்மையும் மனோதிடமும் உடைய நாடார், இவர்களும் புது மதத்தைத் தழுவினர். பின்னர் உயர் குல மக்களாகிய வேளாளர், வைசியர், ப்ராம்ஹணர் இவர்களும் சிறுபான்மையாகப் புதுமதத்தைக் கடைப் பிடித்தனர்.

பயன் என்ன? ஹிந்து தர்மத்திற்கு இரண்டு பெரிய விரோதப் பான்மையுடைய ஸமூஹங்கள் ஸ்ருஷ்டிக்கப்பட்டன. அவை: மகமதியமும் கிரிஸ்தவமும். மகமதிய ஸமூஹத்தால் எவ்வளவு விளைவுகள் உண்டாயின என் பதை இங்கு எடுத்துக் காட்டவேண்டியதில்லை. சரித்ரமும் அநுபவமுமே அதற் குப் போதிய அத்தாட்சியாகும். இரண்டாவதான கிரிஸ்தவம் செய்யும் இடை யூறுகள்தான் மிகவும் பயப்படத்தக்கவை. இம்மதத்தால் சரீர ஹிம்ஸை, நிர்ப்பந்தம், பயமுறுத்தல் இவையொன்றும் கிடையாது. எந்த இடத்தில் பசி யோ, எந்த இடத்தில் இழிவுபடுத்தப்பட்டதான எண்ணம் உண்டோ, அந்த இடத்தில் இம்மதத்தின் வலைவீச்சு செல்லும். 'உங்களுடைய இம்மை மறுமை இரண்டையும் உயர்குலத்தோர் கெடுத்தனரே! எங்கள் கடவுளிடம் யாவ ரும் ஸமமே' என்றவுடன் அதில் மயங்காதவர் யாவர்?

இப்படி வெளியிலே வ்யாபரிக்கிற சக்தி விசேஷங்களால் நேர்ந்த கஷ்டம் தவிர ஹிந்து ஸமூஹத்தில் ஸரியான மதக்கல்வி யில்லாதபடியால், விசிஷ்ய நம் ஸ்ரீ வைஷ்ணவச் சிறுவர் சிறுமியர், மத அறிவும் அதனுல் உண் டாகும் மனத்தெளிவும் இல்லாமல், கட்டைத் தறித்து ஓடும் யானைபோல் செல் வழி யறியாமல் தத்தளிக்கின்றனர். பிற மதங்களெல்லாம் அவர்களுக்கு ஹித மாகவே தோன்றுகின்றன. இந்த அநர்த்தத்தை நாம் உணர வேண்டாமா? இதற்குச் செய்யும் பரிஹாரம்தான் என்ன? ஸ்ரீ வைஷ்ணவப் பெரியார் களையும் ஸ்ரீமான்களையும் தாளுந் தடக்கையும் கூப்பி அடியேன் செய்து கொள்ளும் விண்ணப்பம் இதுவே.

'மதத்தைப் பரிபாலிப்பதெல்லாம் ராஜாங்கத்தின் கடமை' என்று சிலர் பொறுப்பற்றுப் பேசுகிறுர்கள். ராஜாங்கத்திற்கும் மதத்திற்கும் ஸம்பந்தமே

கூடாதென்பது சிறந்த நாகரிக அரசியற் கொள்கையாக இப்பொழுது கருதப் படுகிறது. இனி நம் தர்மத்தைக் காக்க மநுவும் மாந்தாதாவும் இக்ஷ்வாகுவும் ஸ்ரீ ராமசந்த்ரனும் அவதரிக்கப் போவதில்லை. எந்த அரசாங்கம் வந்தாலும் நம் சாஸ்த்ரங்களின் வரம்புகளை மீருது பரிபாலிப்பவ ராகப்போவதில்லை. ஆகை யால் இனி நம் விமோசநம் நமது கையாலே என்பதை நாம் மறக்கப் போகாது. ஆனல் நாம் செய்யும் செயல்தான் என்ன வென்ருல் கேளீர்.

(1) நமது ஸ்ரீ வைஷ்ணவப் பெரியார்களும் ஸ்ரீமான்களும் ஒன்று சேர்ந்து ஊக்கமுள்ள ப்ரசாரகர்களை நியமித்து, நாடு நகர மெங்கிலும் ஸர்வ பூததயை பொறுமை இனிமை முதலியவை ததும்பும் நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸித் தாந்த அறிவைப் பரப்பவேண்டும். அத்துடன் நம் கொள்கைக்கும் த்வேஷத் திற்கும் ஸம்பந்தமே யில்லை என்பதை எடுத்துக் காட்டவேண்டும். மக்க ளுடைய ஐஹிக ஆமுஷ்மிக நலனே நம் தர்சநத்தின் அடிப்படை என்பதை நன்கு வெளிப்படுத்தவேண்டும்.

(2) வர்ணாச்ரம விபாகம், அந்த விபாகத்தால் வந்த மர்யாதைகள், இவை குலையாமல், ஜாதியினுல் குறைவுற்றவராகக் கருதப்படும் மக்களுக்குக் கல்வி யறிவு, வாழ்க்கை வஸதிகள், தூய்மை உணர்ச்சி முதலியவற்றை அளிப்ப தற்குப் பாடுபடவேண்டும். அவர்களுக்கு ஞான ப்ரதாநத்தையும் வாழ்க்கை வஸதிகளையும் அளிப்பது சாஸ்த்ரம் விரும்பாதது என்று யாரும் சொல்ல முடி யாது. தற்காலத்தில் பிறரால் உயர்த்தப்பட்ட அம்மக்களிடைக் கல்வியைப் பரப்புவது ஓர் அரிய செயலாகாது. நல்ல வழிகள் ஏற்படுத்துவது, தீபஸ்தம் பங்கள் நிறுவுவது, வாசகசாலைகள் ஏழைமக்கள் தங்கும் மண்டபங்கள் இவற் றைக் கட்டித் தருவது, இவைகளெல்லாம் சாஸ்த்ர வரம்பை மீருமலே தநத் தாலும் மனத்தாலும் ஸாதிக்கக் கூடியவைகளே.

(3) கல்விக் கோட்டையை நாம் கைப்பற்றவேண்டும். உலகத்தோடு ஒத்து ஒழுகவேண்டிய நம் சிறுவர் சிறுமியர் எப்படியும் கல்வி கற்றே தீர வேண்டும். இவ்விஷயத்தில் அரசாங்கம் வகுத்த திட்டம் நமக்கு ஒத்ததான லும் இல்லையானலும் நாம் அதனேடு ஒத்துழைத்தே தீரவேண்டும். ஆனல் நம் குழந்தைகள் சிதறிப் பிறர் வசமாகாமலிருப்பதற்கு என்ன செய்யவேண்டு மென்ருல், அரசாங்கத் திட்டத்திற்கு உள்பட்ட கல்விச்சாலைகளை நாமே நடத்த வேண்டும். பாடசாலைகளை வைத்து வேதத்தை மாத்ரம் ப்ரசாரம் செய்ய வேண்டு மென்கிற மனப்பான்மை சற்று விசாலப்படவேண்டும். குழந்தை களுக்கு இளம் வயதில் ஸித்தாந்த தத்வங்களைப் போதித்தால் வாழ்க்கை முழுவதுமே நலன் ஏற்படும். நம் ஸித்தாந்தத்தில் அநுதாப முடையவர்களையே ஆசிரியர்களாக அமர்த்திக்கொள்ளவேண்டும். பள்ளிப் படிப்புடன் ஸித் தாந்தக் கல்வி கட்டாயப் பாடமாகப் போதிக்கப்படவேண்டும். வேதாத்ய யநம், புராண ச்ரவணம், ஸ்தோத்ரபாட மநநம், ஸ்தோத்ர ஸங்கீர்த்தநங்கள், இவை பள்ளிப் படிப்புக்குப் புறம்பான கட்டாய வ்யாபாரங்கள் (Extra curricular activities) ஆகவேண்டும். பெண் மக்களுக்கும் தனிப்பட்ட

கலாசாலைகள் பதின்மூன்று பதினான்கு வயதுவரையிற் படிக்க வஸதிகள் இருக்கவேண்டும்.

(4) தௌர்ப்பாக்யத்தால் வைதவ்ய மடைந்த பெண்மக்களுக்கு ஸித்தாந்த அறிவு, ஸமூஹ ஸேவை, இந்த உணர்ச்சிகளை உண்டுபண்ணி, அவர்களுக்குத் தெய்விகமாகக் கிடைத்த காலத்தை நற்பயனாக்கித் தரவேண்டும். விதவைகள் பிற மக்களுடைய துயரத்தை ஓட்டும் பணியில் ஈடுபடுவதோடு, தங்கள் நோயையும் அறியாமையையும் மூர்க்கத்தன்மையையும் அகற்றும் உத்தமப் பணியில் ஈடுபடலாம். வைத்யக் கல்வியில் அவர்கள் இழிந்து, தங்களுடைய வாழ்வைப் பிறர்க்குத் துன்பந் தீர்க்கும் முறையில் அமைத்துக்கொள்ளலாம். வைத்யத்தையும் கல்வியையும் வ்யாஜமாகக் கொண்டுதான் கிரிஸ்தவர்கள் பல்லாயிரக் கணக்காக நம் ஹிந்துமக்களை வசப்படுத்திக்கொண்டனர்.

(5) புது வாழ்க்கை முறையில், தற்கால அமைப்பின்படி ஆஸ்பத்திரிகளை அமைத்து, அவைகளை ஸித்தாந்த தத்வங்களில் அன்புள்ள டாக்டர்களைக் கொண்டும் நர்ஸுகளைக் கொண்டும் நடத்தலாம். வாணாளை வீணாளாக்கி உடல் ஆன்மா இரண்டும் நொந்து வாடும் பல விதவைகள், தீங்கின்றி நாடெல்லாங் களிக்கும் இம்மருத்துவப் பணியில் ஈடுபடலாம்.

(6) ஸ்ரீ வைஷ்ணவர்கள், பணக்காரன் ஏழை என்ற இம்மனோபாவத்தை முதலில் விட்டொழித்து, நம் பெண்மக்களின் முன்னேற்றத்தைத் தேடவேண்டும். இக்காலத்தில் ஏழ்மை காரணமாயும் ராஜாங்கக் கட்டளை காரணமாகவும், மிகவும் வயதுவந்த பெண்கள் விவாஹமாகாமலே நிற்கிறார்கள். வரதக்ஷிணைக்கு ஆசைப்படாமல் ஸ்ரீ வைஷ்ணவ இளைஞர் இப்பெண்களை மணந்து ஸமூஹத்தின் உயர்வையுந் தூய்மையையுந் தேடவேண்டும்.

(7) இறுதியாக: நம் நாட்டில் நன்மைக்கோ தீமைக்கோ வந்துற்ற 'ஸினிமா' என்னும் பிசாசத்தை நம் நற்பயனுக்காக உபயோகப்படுத்திக் கொள்ளத்தான்வேண்டும். அதை ஒழிக்க வேண்டும் என்று தள்ளினால், நமக்கு அதிக நன்மை வருவதாகத் தோன்றவில்லை. தோட்டி முதல் தொண்டைமான் வரையில் உள்ளத்தைக் கவர்ச்சி செய்யும் அச்சக்திவிசேஷத்தைத் தள்ளாமல், நம் ஸித்தாந்தத்தின் உயர்வையும் வேத சாஸ்த்ரங்களின் பெருமையையும் எடுத்துரைக்கும் கருவியாக அதை உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும். ப்ராம்ஹணனின் பெயர் சீரழிந்த இந்தக் காலத்தில், இந்த மதுரமான ஸினிமா மூலமாக ப்ராம்ஹணனின் அறிவு, தூய்மை, தயை, பொறுமை இவற்றை விளம்பரப்படுத்தவேண்டும். நம் பெண்மக்களின் உயர்ந்த கற்பு, த்யாகம், கருணை இவற்றையும் ப்ரகாசப்படுத்த வேண்டும். நம் பெரியோர்களின் சரிதைகளைப் படம் பிடித்து நன்கு நடித்துக் காட்டி அன்பு உணர்ச்சியைப் பரப்பவேண்டும். ஆழ்வார்கள், ஆசார்யர்கள், இவர்கள் வாழ்க்கையை மக்களுக்கு நன்கு எடுத்துக் காட்டி, அவர்கள் விஷயத்தில் அன்பும் ஆதரவும் பெருமையும் வளருமாறு செய்யவேண்டும்.

(8) முக்யமாக நமது ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா, சித்ரம் இனிய கதைகள் முதலிய ஆடம்பரங்களுடன், பார்ப்பவர் கண்ணையும் கருத்தையும் பறிக்கும் முறையில் தோன்றவேண்டும்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

திருக்கண்டியூர்

[ஸம்புடம் 7, ஸஞ்சிகை 5, பக்கம் 127-ன் தொடர்ச்சி]

[திருப்பூந்துருத்தி. ஸ்ரீ. உப. V. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், B A., மேல் மாம்பலம்]

அடியேன் திருக்கண்டியூர்ப் பெருமாளை ஸேவித்தபோது எனக்குச் சில அநுபவங்கள் ஏற்பட்டன. சில இடங்களையோ ஸந்நிதிகளையோ காணும் போது அவற்றை யொட்டிய சில பழைய எண்ணங்கள் தோன்றுகின்றன. உடனே இன்றைய சூழ்நிலை மறந்து ஏதோ பழைய காலத்தில் பழைய சூழ்நிலையில் ஸஞ்சரிப்பதாக ஒரு ப்ரமம் உண்டாகிறது.

‘திருக்கண்டியூர் மாஹாத்ம்யம்’ என்கிற ஒரு சிறு புஸ்தகம் என்னை மநோரதத்தில் ஏற்றி 15 வருஷத்துக்கு முந்திய காலத்தில் கொண்டுபோய் விட்டது. ந்யாய ஸ்தலத்தில் ஒரு கக்ஷியை எடுத்து வாதம் புரியும் ஒரு வக்கீலைப்போல், திருக்கண்டியூரின் பெருமைகளையெல்லாம் எடுத்து விளக்கிய அந்த ஸ்வாமியின் பேச்சுக்களெல்லாம் எதிரில் நிகழ்வனபோல் தோன்றின. அவர் கூறிய விஷயங்களை யெல்லாம் கேட்டேன். மநஸ் ஸமாதாந மடைய வில்லை. திருக்கண்டியூர் ஸ்ரீரங்கத்தைக்காட்டிலும் உயர்ந்த ஸ்தலமாக இருக்க முடியுமா? அவர் சொல்லுகிற விஷயங்களெல்லாம் ஆக்ஷேபிக்க முடியாதவைகளாகவே தோன்றின. ஆயினும் தர்க்க பாண்டித்யத்தாலே நினைத்ததெல்லாம் ஸாதிக்க முடியாதோ? அவரும் அப்படி ஸாதிக்கப் பார்க்கிறாரோ?

கடைசியில் நான் கூறினேன். “ஸ்வாமீ! தேவரீர் சொல்லுகிற விஷயங்கள் ஆக்ஷேபிக்க முடியாதவைகளாகத்தான் இருக்கின்றன. ஆயினும் எனக்கு ஒரு ஸந்தேஹம் உண்டாகியிருக்கிறதே!” என்றேன்.

‘அது என்ன?’ என்றார். “நான் கேட்டவரையில் மனிதர்கள் ப்ரதிஷ்டை பண்ணிய கோவில்களைக்காட்டிலும் ஸித்தர்கள், தேவர்கள், ரிஷிகள் முதலியவர்கள் ப்ரதிஷ்டை பண்ணிய கோயில்கள் சிறப்புடையவை. இந்தக் கோயில்களையுங் காட்டில், ஸ்வயம் வ்யக்தமான கோயில்கள் சிறப்புடையவை. ஸ்வயம் வ்யக்தங்களான க்ஷேத்ரங்களுக்குள்ளும் முதன்மை பெற்றது ஸ்ரீரங்கம். இப்படி எல்லா க்ஷேத்ரங்களையுங்காட்டில் ஸ்ரீரங்கமே ப்ரதாநமானதென்று கண்டோக்தமாக ப்ரமாணங்கள் சொல்லுகின்றன. ஸ்ரீரங்கத்தைக் காட்டிலும் திருக்கண்டியூர் சிறப்புடையது என்று புராணங்களில் எங்கேயாவது கண்டோக்தமாகச் சொல்லியிருக்கின்றதோ?” என்றேன்.

அந்த ஸ்வாமி சிரித்தார். “நீர் பெரிய வம்புக்கார மநுஷனாயிருப்பீர் போலிருக்கே!” என்று அவர் சொல்லுவதுபோல் தோன்றியது அந்தச் சிரிப்பு. நான் நினைத்தபடியே அவர் கேட்டும் விட்டார்.

"நீர் அஸாத்யமான மனுஷனாக இருக்கிறீரே! திவ்யதேசங்களுடைய தாரதம்யத்தைப்பற்றிச் சர்ச்சை பண்ணக்கூடாது என்றேன். விடமாட்டே னென்கிறீர். ஸ்ரீரங்கத்தைக்காட்டிலும் திருக்கண்டியூர் உயர்ந்த க்ஷேத்ரந்தான் என்று நிரூபித் தன். பின்பும் விடமாட்டேன் என்கிறீ . இந்த உத்கர்ஷம் கண்டோக்தமாக இருக்கவேணும் என்கிறீர். கண்டோக்தமாகச் சொல்லுகிற ப்ரமாணத்தை எடுத்துக் காட்டினால் அப்போதாவது த்ருப்தி யடைவீரோ?" என்று கூறிச் சிரித்தார்.

"அப்போது ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்" என்றேன். "அப் படியானல் கேளும்" என்று ஆரம்பித்தார். நாங்களும் ஸாவதாநமாகக் கேட்கத் தயாரானோம்.

"ஒரு திவ்யதேசத்துக்கு உள்ள ஏற்றத்தைச் சொல்லும்போது, அது ஆழ்வாரால் மங்களாசாஸநம் பண்ணப்பட்டது என்கிறோம். மற்ற எல்லாப் பெருமையையுங்காட்டில் ஆழ்வார்களுடைய பாடல் பெற்ற பெருமையைத் தான் பெரியதாகச் சொல்லுகிறோம். ஆனல் ஆழ்வார்களுடைய பாடல் இல்லாவிட்டால் திவ்யதேசங்களுக்குப் பெருமையே கிடையாதா? ராஜமன்னர் ஸந்நிதியை வெறும் ஸாதாரணமான ஸந்நிதி என்று சொல்லுவதற்கு யாருக் காவது துணியுமா? ஸ்ரீ பாஷ்யகாரருடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்ட திருநாராயணபுரத்துச் செல்வப்பிள்ளையைத் தாழ்த்திச் சொல்ல நாக்கு வருமா? ஸ்வயம் வ்யக்த ஸ்தலங்களுள் ஒன்றாகிய ஸ்ரீமுஷ்ணத்தை அநாதரிக்க முடியுமா? இவைகளை ஆழ்வார் மங்களாசாஸநம் பண்ணியதற் கடையாளமான பாசுரங்கள் ஒன்றையுங் காணோம். அதனல் என்ன குறைந்துவிட்டது? இவைகளுக்கு, உகந்தருளின திருப்பதிகளைக்காட்டில் வைபவத்தில் ஒருவிதத் திலுங் குறைவில்லை. ஏனென்றால் இவை புராண ப்ரஸித்தி யுடையவை; தேவர்கள் ரிஷிகள் ஸித்தர்கள் இவர்களால் வழிபடப்பட்டவை. அல்லவா?" என்று சொல்லி அந்த ஸ்வாமி நிறுத்தினர். நாங்கள் 'ஆம்' என்றோம். மறு படியும் தொடர்ந்தார்.

"ஸமீபத்தில் ஒரு சர்ச்சை நடந்தது. அது நடந்திருக்கக்கூடாதுதான். ஆயினும் நடந்துவிட்டது. அது அநேகம் பெரியவர்களுடைய உள்ளங்களைப் புண்படுத்திவிட்டது. ஆனல் அதிலிருந்து பல நீதிகளையும் கற்றுக்கொண் டோம். அந்தச் சர்ச்சை, ஸ்ரீ சேட்டலூர் ஸ்வாமி எழுதிய சில வாக் ங்களி லிருந்து எழுந்தது. 'ஸ்ரீ ஹஸ்திகிரி வரதன் ஆழ்வாருடைய மங்களாசாஸ நத்தைப் பெற்றிராவிட்டாலும், ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனுடைய மங்களா சாஸநத்தையும் ப்ரபந்தங்களையும் பெற்றுள்ளபடியால், ஆழ்வார் மங்களா சாஸநம் பண்ணிய எம்பெருமான்களையுங்காட்டில் அதிக ஏற்றம் பெற்று விட்டார்' என்பது அவர் சொல்லிய விஷயம். ஸ்ரீ தேசிகனல் மங்களா சாஸநம் பண்ணப்பட்ட பெருமையை உயர்த்திச் சொல்லவே அவர் அவ்வாறு கூறினர். ஆனல் அதிலிருந்து ஹஸ்திகிரி வரதன் ஆழ்வாரால் மங்களாசாஸநம்

பண்ணப்படவில்லை என்று அவர் கூறியதாக ஆகிற தல்லவா? இதைச் சிலர் ஆக்ஷேபித்தார்கள். 'உலகேத்தும் ஆழியான் அத்தியூரான்,' 'அத்தியூரான் புள்ளை யூர்வான்' என்று ஆழ்வார் அருளியதைச் சேட்டலூர் ஸ்வாமி பார்க்க வில்லையோ?' என்றார் சிலர். 'அத்தியூரான்' என்றது மலை யடிவாரத்தில் உள்ள ஸ்ரீநருஸிம்ஹனையே யன்றி மலைமேலுள்ள தேவாதிராஜனை யல்ல வென்று அதற்கு ஸமாதானம் சொன்னார்கள். 'திருவாய்மொழி முதல் பாசுரத்தில் சொன்ன 'அயர்வறு மமரர்கள் அதிபதி' என்பது தேவாதிராஜனையே குறிக்கும்; ஆகையால் திருவாய்மொழி ஆயிரமும் ஸ்ரீதேவப் பெருமாள் விஷயமே' என்றார் சிலர். இப்படியாக நடந்த சர்ச்சை கடைசியில் ஸ்ரீ தேவப்பெருமாள் ஆழ்வார் மங்களாசாஸநம் பண்ணப்பெற்றவரே என்று முடிவாயிற்று. இதிலிருந்து என்ன ஏற்படுகிறது தெரிகிறதா?'' என்றார் ஸ்வாமி.

'தெரியவில்லையே! சொல்லுங்கள்' என்றோம். ''உலகில் யாராவது ஸ்ரீரங்கநாதனையோ திருவேங்கடமுடையானையோ, பார்த்தஸாரதியையோ, ஆராவமுதனையோ ஆழ்வார் மங்களாசாஸநம் பெறாதவர் என்று சொல்ல முன் வருவார்களா? ஆனால் ஹஸ்திகிரி வரதனுக்கு மங்களாசாஸநம் இல்லை யென்று சொல்ல ஒரு ஸ்வாமி முன்வந்தார். அவ்வாறு வந்தது ஹஸ்திகிரி வரதனைப் பற்றிய பாசுரங்கள் மிகவும் குறைவாக இருப்பதனால்தான். ஆனால் ஹஸ்திகிரி வரதனுடைய புராண ப்ரஸித்தியோ அந்யாத்ருஶமானது. இந்தப் புராண ப்ரஸித்தியால், ஆழ்வார்கள் அருளிய பாடல்கள் கொஞ்சம் குறைவுதான் என்கிற எண்ணம் நம் மனத்தை விட்டு அகன்றுவிடுகிறது. ஆழ்வார்களைக் காட்டிலும் ஸ்ரீ தேசிகன் இங்கு அதிகமாக ஈடுபட்டிருக்கிறார் என்று நினைக்கும்போது, மாஹாத்ம்யம் இன்னும் ஒருபடி உயர்கிறது. அயோத்யை, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்திகை, த்வாரகை என்கிற இவ்வேழு முக்தி க்ஷேத்ரங்களிலேயும் காஞ்சிதான் உயர்ந்தது என்கிறார் ஸ்ரீ தேசிகன். இவ்வெம்பெருமான் விஷயமான ஹஸ்திகிரியின் மாஹாத்ம்யத்தைக் குன்றின்மேலிட்ட விளக்காகப் பண்ணிவிட்டார் ஸ்ரீ தேசிகன். எனவே இந்தக் காஞ்சீ நகரமும் புராண ப்ரஸித்தியாலேயே பெருமையைப் பெற்றிருக்கிறது'' என்றார்.

இதற்குள் நான் இடை மறித்து, ''காஞ்சீ க்ஷேத்ரம் ஸ்ரீ தேசிகன் உள்ளத்தைக்கவர்ந்த ஸ்தலமாயிற்றே; இந்தத திருக்கண்டியூரை ஸ்ரீ தேசிகன் ஸேவித்ததற்குக்கூட ப்ரமாண மில்லையே!'' என்றேன்.

''இல்லை என்று யார் சொன்னது? ஸ்ரீ தேசிகனுக்கும் குமார நயினாருக்கும், விண்ணாற்றங்கரையும் திருக்கண்டியூரும் மிகவும் உகப்பான விடங்கள் என்பது மிகவும் ப்ரஸித்தம். ஸ்ரீ தேசிகன் விஷயமான இந்தக் கீர்த்தனையைப் பாரும்'' என்று பின்வரும் கீர்த்தனையைப் பாடினார். ராக ஞானத்தோடு பாடியபடியால் அதை நாங்கள் மிகவும் ரஸித்தோம்.

பல்லவி

ஸேவித்தார் எங்கள் திருவேங்கடநாதாரியர்
ஸேவித்தார்.

சரணம்

திருப்பேர் நகரி லப்பக் குடத்தானை — அம்பில்
சேர்ந்த நாகத்தணையாந் தடத்தானை — மிக
விருப்பமாங் கண்டியூரி னிடத்தானை — அங்கே
மிண்டி யரன் சாபந்தீர் திடத்தானை — யின்ன
மருப்பரவிய தஞ்சை மாமணிக் கோயில் — வளர்ந்
திருக்கு மெனக்கரசை யென்தஞ்சை யாளியையும் (ஸேவித்தார்)

இக்கீர்த்தனையை நாங்கள் கேட்டு மிகவும் இன்புற்றோம். பின்பு அந்த ஸ்வாமி மறுபடியும் தொடர்ந்தார். "இதிலிருந்து திருக்கண்டியூர் எம்பெருமானை ஸ்ரீ தேசிகன் ஸேவித்து மகிழ்ந்தார் என்பது தெரியவில்லையா?" என்றார்.

'ஆம்; ஒத்துக்கொள்ளுகிறோம்' என்றோம். அவர் மேலே தொடர்ந்தார். "இவ்வளவு தூரம் நான் சொல்லியது எதற்காகவென்றால், ஒரு திவ்ய தேசத்தின் ஏற்றத்துக்கு ஆழ்வார் செய்தருளிய மங்களாசாஸநத்தோடுகூட அதன் புராண ப்ரஸித்தியும் காரணமாகும் என்பதை விளக்குவதற்காகவே. இந்தப் புராணங்கள் எல்லாம் பெரிய ரிஷிகள் ஒருவர்க்கொருவர் பரிமாறிக் கொண்ட விஷயங்கள். திருக்கண்டியூர் ஸ்தல புராணம், ப்ருகு மஹர்ஷி மற்ற ரிஷிகளுக்குச் சொல்லிய விஷயம். அதில், பகவான் சிவபெருமானுடைய ப்ரம்ஹ ஹத்தி சாபத்தைத் தீர்த்த வரலாறுதான் முக்யமானது. சிவன் பகவானுடைய பரம பக்த னல்லவா? அவர் பகவானைக் கேட்டுப் பகவான் அவருக்கு உபதேசம் செய்யும் அர்த்தங்கள் மிகவும் ஆப்த வசந மல்லவா! என்ன சொல்கிறீர்?" என்று எங்களைப் பார்த்தார்.

'ஆம்; ஆப்த வசநம்தான்' என்றோம். "சிவன் கேட்கிறார். பகவான் உபதேசம் செய்கிறார். பகவான் பூமியில் எழுந்தருளியிருக்கும் திவ்ய தேச வைபவங்களைப் பற்றிப் பகவானே என்ன சொல்லுகிறார் தெரியுமா?"

"எனக்குப் பூமியில் நூற்றெட்டுப் பரம பாவநமான ஸ்தாநங்கள் இருக்கின்றன. அவற்றுள்ளும் எட்டு ஸ்தாநங்கள் விசேஷம். அவ்வெட்டிலும் ஸ்ரீரங்கந்தான் மேன்மை பெற்றது. அதைக்காட்டிலும் சிறந்த க்ஷேத்ரம் ஒன்று இருக்கிறது. எந்த க்ஷேத்ரத்தில் என்னுடைய திருவடி தீர்த்தத்தினால் நிரம்பி ப்ரஹ்ம கபாலமானது உன் கையிலிருந்து கீழே விழுமோ, அது ஸ்ரீரங்கத்தைக்காட்டிலும் நூறு மடங்கு மேன்மை பெற்றது" என்கிறார். பிறகு சிவன் எல்லா க்ஷேத்ரங்களையும் சுற்றிவிட்டுக் கடைசியில் திருக்கண்டியூர் க்ஷேத்ரம் வந்தவுடன், கபாலம் நிவ்ருத்தியாயிற்று. இந்த வரலாற்றைச்

சொல்லுகிறது புராணம். இதிலிருந்து திருக்கண்டியூர் ஸ்ரீரங்கத்தைக்காட்டிலும் ஏற்றமுள்ளது என்று ஏற்படவில்லையா?'' என்றார். அவர் சொல்லியதை ஏற்காமல் என்ன செய்வது?

"தேவரீர் சொல்லிய விஷயங்கள் அத்தனையும் ப்ரமாணங்களுக்குப் பொருந்தியவைதான்; நான் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் பெரிய ஸ்வயம் வ்யக்த ஸ்தலமான ஸ்ரீரங்கம் எங்கே? பிற்காலத்தவரால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட திருக்கண்டியூர் எங்கே? இதற்குத் தேவரீர் என்ன சொல்லுகிறது?'' என்றேன்.

"இந்தத் திருக்கோயில் பிற்காலத்தவரால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டதென்று யார் சொல்லியது? இந்த விமானம் அநாதியானது. அநேக யுகங்களுக்கு முன்னால் மஹாபலிச் சக்ரவர்த்திக்கு அநுக்ரஹம் பண்ணவேண்டிப் பகவான் இங்கே ஆவிர்ப்பவித்தார். அப்போது அவருடைய ஸங்கல்பத்தால் இந்த விமானமும் கோவிலும் கோபுரமும் இங்குத் தோன்றின'' என்றார்.

இந்த ஸ்தலத்தில் மஹாபலிச் சக்ரவர்த்திக்குப் பகவான் அநுக்ரஹம் பண்ணினார் என்பது ஒரு புது விஷயமாக இருந்தது. மஹாபலியைப் பற்றி முன்னெல்லாம் நான் கேட்டிருந்த வரலாறு, அவன் ஒரு பெரிய விஷ்ணு பக்தன் என்றும், லோகங்களையெல்லாம் ஆக்ரமித்துத் தன் ஆதிக்கத்துக்குள் கொண்டுவந்தான் என்றும், அவன் ஒரு யாகம் செய்யும்பொழுது ஆச்ரிதர்களிடம் பக்ஷபாதம் உள்ள பகவான் வாமந ரூபமாக வந்து தமது காலடியால் மூன்றடி மண் யாசித்தார் என்றும், மஹாபலி அதைக் கொடுக்க இசைந்ததும் பகவான் த்ரிவிக்ரமனாக ஓங்கி வளர்ந்து எல்லா லோகங்களையும் இரண்டே அடியால் அளந்துகொண்டு, மூன்றாம் அடியால் மஹாபலியைப் பாதாளத்துடன் அழுத்திவிட்டார் என்றும்தான். எனவே திருக்கண்டியூரில் பகவான் மஹாபலிக்கு அருள்செய்த வைபவத்தைக் கேட்கவேண்டுமென்று எனக்கொரு குதூஹலம் உண்டாயிற்று. ஆகவே அதைச் சொல்லுமாறு அந்த ஸ்வாமியைக் கேட்டேன்.

அவர், 'மஹாபலி பகவானுடைய ஸ்வர்ண கிரீடத்தையே அபஹரித்துவிட்டான்' என்று தொடங்கினார். "இதென்ன ஸ்வாமி! பரம பக்தனாகிய மஹாபலி தனது பக்தியினாலேயே பகவானைக் கட்டியவன்; முன்பு சுக்ராசார்யர் எவ்வளவோ தடுத்தும் 'பகவானுடைய கை கீழேயும் தன் கை மேலேயும் இருக்குமானால், கொடுக்கத்தகாதது என்றும் ஒன்று உண்டோ!' என்று கேட்டவன். இப்போது அவன் பகவானுடைய ஸ்வர்ண கிரீடத்தை அபஹரித்தான் என்றால் பொருத்தமாக இல்லையே!'' என்றேன்.

"பகவானுடைய மாயை பரம பாகவதர்களைக்கூட சில ஸமயங்களில் மயக்கிவிடும். அப்படி மயங்கிய ஒரு ஸமயத்தில்தான் மஹாபலி இந்தப் பாபத்தைச் செய்துவிட்டான். அதனால் அவனுக்குப் பைத்யம் பிடித்துவிட்டது.

189249

அடிக்கடி மூர்ச்சித்துப் புத்தி தடுமாறி, பசியாலும் தாஹத்தாலும் வருந்திக் கடைசியில் பகவானுடைய திருவருளால் திருக்கண்டியூர் எல்லைக்குள் வந்து விட்டான். உடனே ஸ்தலத்தின் மஹத்வத்தால் புத்தி தெளிந்து பகவானைப் பலவிதமாக ஸ்துதித்தான். மஹாபலியின் ஸ்துதியால் மகிழ்ச்சி யடைந்த பரமன், ஸ்ரீ பூமி நீளைகளுடனும் அநந்த கருட விஷ்வக்ஸேநர்களுடனும் ஒரு வைகாசி மாஸம் பூர்ணிமையில் அவனுக்கு ப்ரத்யக்ஷமானார். மஹாபலி மிகவும் மகிழ்ந்தான். ஸ்துதித்தான். அநேக வரங்களைப் பெற்றுக் கொண்டான்.

'பாபச் சுமை எவ்வளவு பெரியதாக இருந்தாலும், அதை இந்த க்ஷேத்ரம் ஒரு நொடிப்பொழுதில் கண்டித்துவிடும். அதனால் இதற்குக் கண்டிந க்ஷேத்ரம் என்று பெயருண்டாகும்' என்றும், 'உனக்கு அருள் செய்வதற்காக நான் இங்குத் தோன்றினமையால் இன்று முதல் எனக்குப் பலிநாதன் என்று பெயருண்டாகும்' என்றும் பகவான் சொல்லியருளினார். அப்போது பகவானுடைய ஸங்கல்பத்தால் கமலாகார விமாநமும் திருக்கோவிலும் கோபுரமும் தோன்றின. அந்த விமாநத்தில் இருந்துகொண்டு இன்றளவும் ஸேவை ஸாதித்துவருகிறான் இவ்வெம்பெருமான். இப்படிப்பட்ட ஐதிஹ்யங்களைத் தன்னுள் பொதிந்து கொண்டு அதி கம்பீரமாக அதோ நிற்கும் கோபுரத்தாழ்வாளைப் பாரும்'' என்று காட்டினார். கோபுரத்தை ஸேவித்து எல்லையில்லாத ஆநந்தம் எய்தினேன். [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீஶடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகாய நம:

ஹநுமானும் பீமஸேநனும்

[ஸ்ரீ. உ.ப. கோமாண்டூர் ஸுதர்சநாசார்யர், தமிழ்ப் பண்டிதர், பெருமாள்கோவில்]

அஷ்ட குலாசலங்களுள் கந்தமாதநம் என்பது ஒன்று. ஸீதா ராமர்களின் அநுக்ரஹத்தால் சிரஞ்ஜீவிப் பட்டம் பெற்ற ஹநுமான், அப்பர்வதத்தில் ராமத்யாநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்கிறாரென்று நூல்கள் கூறும்.

ஒரு ஸமயம் பாண்டவர் சகுனியோடு மாயச் சூதாடி, தமது நாடு நகரம் முதலியவற்றை இழந்து துர்யோதநன் ஏவலால் பன்னிரண்டு ஆண்டுகள் வநவாஸம் செய்தனர். அப்போது அவர்கள் காம்ய வநத்தில் வஸித்து வருங்கால், ஒரு ஸமயம், ஆயிரம் தளத்துடன் கூடியதும் மிகுந்த பரிமளம் வாய்ந்ததுமான ஸௌகந்திகம் என்னும் புஷ்பவிசேஷம் ஒன்று காற்றினால் அடிக்கப்பட்டு த்ரௌபதியின் ஸமீபத்தில் வந்தது. த்ரௌபதி அதனை எடுத்துப் பார்த்து, அதன் வனப்பையும் மணத்தையும் கண்டு வியந்து, தனக்கு இத்

தகைய புஷ்பங்கள் இன்னும் பல வேண்டு மென்று பீமஸேநனை வேண்டிக் கொண்டாள். வீமன் அவளது வேண்டுகோட்கு இணங்கி, புஷ்பம் வந்த திக்கை நோக்கிப் புறப்பட்டுக் கடைசியாய்க் கந்தமாதந பர்வதத்தை அடைந் தான். அப்பர்வதத்தின் ரமணீயமான தாழ்வரைகளில் ஸஞ்சரித்துவந்தான். பல வன விலங்குகளை வெருட்டி அடித்தான்; பக்ஷி ஜாலங்களின் இனிய ஒலி களைக் கேட்டு ஆநந்தித்தான். இவ்வாறு அவன் ஸஞ்சரித்து வருகையில், ஒரு கதலீ வநத்தையும், அதனிடையே ரமணீயமான ஒரு ஸரஸ்ஸையும் கண்டான். அதில் இறங்கி விளையாடினன். மதுரமான அதன் தீர்த்தத்தைப் பருகினன். தோள் தட்டி அட்டஹாஸம் செய்தான். அந்த ஒலியைக் கேட்டு ஸிம்ஹம் முதலிய வனவிலங்குகள் கூவிக் கொண்டு நாற்புறமும் ஓடலாயின.

அப் பர்வதத்தில் கதலீ வனத்தின் அணித்தாக ஹநுமான் நித்ரை செய்துகொண்டிருந்தார். பேராற்றல் படைத்த வீமர்ஜனது அட்டஹாஸ த்வநியால் அவரது தூக்கம் சிறிது கலைந்தது; தம் வாலால் பூமியை ஓங்கி ஓரடி யடித்தார். அதன் ஓசை வநத்தையே நிலைகுலையச் செய்தது. அதைக் கேட்டான் வ்ருகோதரன். சப்தம் தோன்றிய விடம் சென்றான். அங்கு ப்ரஹ்மாண்டமான சரீரத்துடன் மின்னல் கூட்டம்போல் தேஜோமயமாய் விளங்கும் ஹநுமான் ஒரு பாறையின்மேல் வீற்றிருப்பதைக் கண்ணுற்றான். பீமஸேநன் அவரை நெருங்கி ஸிம்ஹநாதம் செய்தான். அதைக் கேட்டு ஹநு மானும் கொஞ்சம் விழிகளைத் திறந்து அவனைப் பார்த்துச் சிரித்தார். பின் வருமாறு அவனுடன் பேசலானர்.

ஹநுமான்:—"அப்பா! தூக்கத்திலிருந்து என்னை எழுப்பின நீ யாவன்? மநுஷ்யர் புத்தியுள்ளவர்; ஸர்வ பூதங்களிடமும் தயை காட்ட வேண்டியவர் கள். அப்படியிருக்க: அல்ப புத்தியால் நீ வந விலங்குகளை விரட்டுகின்றாய். புத்திமான்களா யுள்ளோர் க்ரூர கர்மங்களை அநுஷ்டிப்பார்களா? நீ ஸாது ஸேவை செய்தாயில்லை. இவ்வநத்துக்கு நீ ஏன் வந்தனை? எங்குச் செல்கின் றாய்? இவ்வநம் மநுஷ்யர் ஸஞ்சரிக்கத் தக்கதன்று. இப்பர்வதமும் மனித ஸஞ்சா ரத்துக்கு யோக்ய மன்று. ஸித்தர்களே இதில் வாஸம் செய்வர். மிகுந்த கருணையாலும் ஸ்நேஹத்தாலும் உன்னைத் தடுக்கிறேன். இந்தா; அம்ருத துல்யமான மூல பலங்களை அருந்திவிட்டு என் சொற்படி அப்பாற் செல்."

பீமஸேநன் :—"ஐயா! நான் சந்த்ர வம்சத்தில் குருகுலத்தில் பாண்டு மஹாராஜாவின் மைந்தன். வாயுதேவன் அருளால் குந்தீ தேவிக்குப் பிறந்த வன். என்னைப் பீமஸேநன் என்பார்கள். நீர் யாவர்? ஏன் வாநர ரூபம் படைத்துள்ளீர்? நீர் இங்கிருப்பதற்குக் காரணம் என்ன? அருள வேண்டும்".

ஹநுமான் :— [சிரித்துக்கொண்டே] "நான் ஒரு வாநரன். உன் விருப்பத்தை முற்றும் பெற வொட்டேன்; விரைவில் அப்பாற் செல். வீண் பேச்சு வேண்டாம்; வருத்தம் வேண்டாம்."

பீமஸேநன் :— எனக்கு வருத்தமே வரட்டும்; மற்றும் எதுவாகிலும் வரட்டும். அதைப்பற்றி நீ சிந்திக்க வேண்டாம். எனக்கு வழியை விடு. எழுந்திரு.''

ஹநுமான் :— அப்பா! நான் நோயினுல் நலிந்து வருந்துகிறேன்; எனக்கு எழுந்திருக்கச் சக்தியில்லே. அவச்யம் போகவேண்டுமானுல் என்னைத் தாண்டிப் போ.''

பீமஸேநன் :— "ஹேயகுண ரஹிதனும், ஸகலாந்தர்யாமியுமான பகவான் எல்லாச் சரீரத்தையும் வ்யாபித்து நிற்பதுபோல் உன்னுள்ளும் விளங்குகிறு னன்ருே? நான் உன்னைத் தாண்டிச் சென்ருல் அவனை அவமதிப்பதாக அல்லவோ ஏற்படும்? ஸர்வ பூதங்களேயும், அந்தராத்மாவாயிருந்து ப்ரேரணம் செய்யும் புருஷோத்தமனை ஆகம ஶாஸ்த்ரங்களால் நான் அறியாதிருந்தால், ஹநுமான் கடலைத் தாண்டிச் சென்றதுபோல் நானும் உன்னைத் தாண்டிச் செல்வேன். இப்போது உன்னைத் தாண்டிச் செல்வது அபசாரத்தின் பாற்படும். யான் அதனைச் செய்ய உடன்படேன்.''

ஹநுமான் :—ஓ நர ச்ரேஷ்ட! ஸாகரம் தாண்டின ஹநுமான் யார்?

பீமஸேநன் :— அவர் என் தமையன்; வாயுதேவன் அருளால் அஞ்ஜநா தேவிக்குப் பிறந்தவர். மஹா புத்திமான். பலவான். மஹாவீரன். ச்லாக்யமான குணங்கள் பொருந்தியவர். ராமபத்நீ நிமித்தம் நூறுயோஜனை விஸ்தார முள்ள ஸாகரத்தை ஒரே தாண்டாய்த் தாண்டினுர். தேஜஸ்ஸிலும் பராக்ரமத்திலும் பலத்திலும் நான் அவர்க்கு ஸமமானவன். உன்னை ஒரு க்ஷணத்தில் வெல்வேன். எழுந்திரு. வழிவிடு. இல்லையேல் உன்னை யமலோகம் அனுப்புவேன்.''

ஹநுமான் :—[இவன் பலத்தால் கர்வங் கொண்டவனென்று அறிந்து] அப்பா! எனக்கு எழுந்திருக்கச் சக்தியில்லே. என் வாலையேனும் தூக்கி எறிந்துவிட்டுப் போ.''

பீமஸேநன் ஒரு கையால் அவர் வாலைத் தூக்கப் போனுன். அது அசையவில்லே. பிறகு இரு கைகளாலும் அசக்கிப் பார்த்தான். அப்பொழுதும் அது அசையவில்லே. உடனே கோபம் கொண்டான். புருவங்கள் நெறிந்தேறின. உதடுகள் துடித்தன. கண்கள் சுழன்றன. தேஹம் வியர்த்தது. தன் ப்ரயத்நங்கள் வீணுனமை கண்டு நாணி மிகுந்த லஜ்ஜையுடன் ஹநுமான் பக்கத்தில் வந்து நின்ருன். அவரைத் தீர்க்க தண்டனிட்டுக் கைகளைக் கூப்பிக்கொண்டு சொல்ல ஆரம்பித்தான் :—

பீமஸேநன் :—வாநர ச்ரேஷ்டரே! நான் சொன்ன அத்யுக்திகளைத் தயை செய்து மனத்திற் கொள்ளாதீர். மன்னித்துக் கொள்ளும். நீர் தேவ ஜாதியில் ஸித்தனே? கந்தர்வனே? யாரோ சொல்லும். ஶிஷ்யனைப்போல் பணிந்து கேட்கிறேன். வாநர ரூபதாரியான நீர் யார்?''

ஹநுமான்.—*"ராமபத்நியைத் தேடிவரும் பொருட்டு ஸுக்ரீவ மஹாராஜரால் அனுப்பப்பட்டுக் கடலைத் தாண்டினவன் நானே. ராமகதை லோகத்தில் வழங்கிவரும் வரையில் நான் லோகத்தில் ஜீவித்திருக்க ஸ்ரீராமனிடம் வரம் பெற்றேன். ஸீதையின் ப்ரஸாதத்தால் எனக்கு எல்லாப் போகங்களும் இம்மலையில் அமைந்துள்ளன. இங்கே அப்ஸரஸ்ஸுக்களும் கந்தர்வர்களும் ஸ்ரீராம சரித விஷயமான கானங்களை ஸதா செய்து எனக்கு ஸந்தோஷ மளிக்கிறார்கள். மநுஷ்யர் இங்கே வருவதில்லை. தேவர்களே இங்கு ஸஞ்சரிக்கின்றனர். நீ இம்மலையின்மீது சென்றால் உன்னை யக்ஷனே ராக்ஷஸனே வருத்துவர். இன்னும் யாராவது உன்னை சபிக்கவும் கூடும். ஆதலின் நீ இம்மலையின்மேல் ஏறலாகாது."

பீமஸேநன்.—இன்று உம்மைத் தர்ஸித்தேன். என் ஜந்மம் ஸாபல்யமாயிற்று. நானே தந்யன். என்னை அன்புடன் அநுக்ரஹித்தீர். உம்மை ஒரு வரம் வேண்டுகின்றேன். ஸாகர லங்கந காலத்தில் நீர் எடுத்த விச்வரூபத்தைத் தர்ஸிக்க இச்சிக்கிறேன். தயை செய்து அவ்வுருவத்தை இப்போது எனக்குக் காட்டவேண்டும்."

ஹநுமான்:—"அந்த ரூபம் உன்னாலாவது மற்ற யாராலாவது இப்போது பார்க்க முடியாது. அக்காலத்தின் நிலை வேறு; இப்போதைய நிலை வேறு. க்ருதயுக காலம் வேறு; த்ரேதாயுக காலம் வேறு. இது த்வாபரயுகம்; இது அவ்வளவு நல்ல காலம் அன்று; அந்த ரூபம் இப்போது எனக்கில்லை."

பீமஸேநன்:—"வாநர ச்ரேஷ்டரே! யுகங்களின் தன்மைகளையும், அவ்யுகங்கள் தோறும் உள்ள தர்மார்த்த காமங்களின் ஸ்வரூபங்களையும், மற்றும்

* ஸ்ரீ ஸீதா ராமர்கள் பக்கல் ஹநுமான் செய்த தொண்டின்திறம் வருமாறு:—

போராடி லங்கையிற் கடவுள் வரானென்று
 பொருமு சானகி யுயிரையும்
பூவையவள் புக்கவழி யெந்தவழி யென்றே
 புலம்பு பெருமான் உயிரையும்
பேராது றக்கமொ(டு) உணவுநீக்கிய இளைய
 பெருமாளி னுருயி ரையும்
பிறிதுகதி யிலையென்று மறுகிய விபீடணப்
 பெருமாளி னுருயி ரையும்
பாராள வைத்ததொரு பரத னுயிரையு மேழு
 பத்துவெள்ளத் துயி ரையும்
பலபல தொகைப்படு சராசரத் துயிரையும்
 பாதுகாத் தருளு மெங்கள்
சீராள னேமிக்க தாராளனே யழகு
 சிறுதேர் உருட்டி யருளே
திக்குளோர் பரவவரு முக்கண்மா ருதியமல
 சிறுதேர் உருட்டி யருளே.

அநுமார் பிள்ளைத் தமிழ்—
சிறுதேர்ப் பருவம் – 8.

கர்மங்கள் ஆசாரங்கள் இவைகளின் ஸ்திதியையும் எனக்கு விளங்கச சொல்ல வேண்டும்.''

ஹநுமான்:—சுருங்கச் சொல்லுகிறேன். கேள்.

க்ருதயுகத்தில் தர்மம் குறைவதில்லை. தேவ தாநவ கந்தர்வ யக்ஷ ராக்ஷஸாதிகள் பரஸ்பர விரோதிகளாய் அப்போதில்லை. மநுஷ்யர்க்கு க்ஷய மில்லை. மநுஷ்யர் அப்போது க்ரய விக்ரயம் செய்வதில்லை. ருக் யஜுஸ் ஸாம வேத விபாக மில்லை. காம்ய கர்ம மில்லை. வ்யாதிகள் இல்லை. பொறுமை, துக்கம், யுத்தம், சோம்பல், கோள் சொல்லல், பயம், தாபம் இவைகள் இல்லை. யாவரும் த்யாகபரர்கள். அப்போது யோகிகளுக்குப் பரப்ரஹ்மமே பரம மான கதி. நாராயணன் அப்போது சுக்ல வர்ணனாய் இருந்தான். ப்ராஹ்ம ணாதி வர்ணஸ்தர்கள் க்ருதயுகத்தில் உண்டானார்கள். அவரவர் தங்கள் தங்கள் கர்மங்களை லோபமின்றி அநுஷ்டித்து வந்தார்கள். யாவர்க்கும் ஆசாரம் ஜ்ஞாநம் கர்மம் முதலானவை ஸமமாயிருந்தன. யாவரும் எப்போதும் ஸ்ரீமந் நாராயணனையே உபாஸித்து வந்தனர். அப்போது உபாஸந மந்த்ரம் ப்ரண வம் ஒன்றே. காலம் தவறாமல் நாலு ஆச்ரமத்துக்கும் பொருந்திய கர்மங்களை அவரவர்கள் பலாபிஸந்தி யில்லாமல் செய்து மோக்ஷத்தை அடைந்து வந்தார் கள். வர்ணாச்ரம தர்மம் க்ருதயுகத்தில் நான்கு கால்களுடன் கூடி யிருந்தது.

த்ரேதா யுகத்தில் தர்மம் மூன்று கால்களுடன் கூடியிருந்தது. ஜநங் கள் ஸத்யத்துடன் வர்த்தித்து வந்தார்கள். ஸ்ரீமந் நாராயணன் அப்போது ரக்தவர்ணன். மநுஷ்யர் தர்ம ரக்ஷணம் செய்துவந்தார்கள். அப்போது யஜ் ஞங்கள் ப்ரவர்த்தித்தன. பலாபிஸந்தியுடன் க்ரியைகளும் தாநங்களும் பெரு கின. ஜநங்கள் ஸ்வதர்மங்களில் நிலை கொண்டனர்.

த்வாபர யுகத்தில் தர்மத்துக்கு கால்கள் இரண்டே. பகவான் மஞ்சள் நிறமுடையவர். வேதம் நான்கு விபாகத்தை அடையும். மூன்று வேத மென் றும் நான்கு வேத மென்றும் எற்படும். சாஸ்த்ரங்கள் பேதிக்கும். க்ரியை களும் பேதிக்கும். ஜநங்கள் தபஸ்ஸிலும் தாநத்திலும் ப்ரவர்த்திப்பார்கள். ராஜஸகுணம் ஜநங்களுக்குள் மேலிடும். ஸத்வகுணம் குறையும். ஒவ் வொருத்தர்தான் ஸத்யத்தில் நிலை கொள்வர். ஸத்யம் துறந்தவர்க்குள் வ்யாதிகள் பெருகும். ஜநங்கள் காம ப்ரேரிதர்களாகவும் ஸ்வர்க்காபேக்ஷை யும் கொண்டு யாகம் செய்வார்கள். அதர்மத்தால் ப்ரஜைகள் க்ஷயத்தை யடைவர்.

கலி யுகத்தில் தர்மத்துக்குப் பாதம் ஒன்றே. அது தாமஸ யுகம். நாராயணன் க்ருஷ்ண வர்ணத்தை அடைவன். வேதாசாரங்கள் வர்ணாச்ரம தர்மங்கள் முதலியன அத்யந்தம் லோபத்தை அடைந்து விடும். அதி வ்ருஷ்டி அநாவ்ருஷ்டி சோம்பல் க்ரோதம் வ்யாதி இவைகள் மிகுதியும் உண்டாகும். பசி பயம் முதலியன அதிகரிக்கும். இப்படி யுக தர்மங்கள் மாறுதல்களை

அடையும். கோரமான அக்கலியுகம் இதோ ஸமீபித்து விட்டது" என்று யுக தர்மங்களை ஸங்க்ஷேபமாகச் சொல்லி வர்ணாச்ரம தர்மங்களின் பாகுபாடுகளையும் விஸ்தாரமாகக் கூறினார்.

பீமஸேநன் ஹநுமானது அமுத மொழிகளைக் கேட்டு வியந்து மகிழ்ந்து ஸமுத்ர லங்கநம் செய்யும்போது எடுத்த * விச்வரூபத்தைத் தனக்குக் காட்ட வேண்டுமென்று மீண்டும் ப்ரார்த்திக்க, அவ்வண்ணமே அவ்வுருவத்தை அவனுக்குக் காட்டினார். பின்னர் ஹநுமான் பீமஸேநனிடம் "அப்பா பீமஸேநா! ஸௌகந்திக வநத்துக்குப் போகும் மார்க்கம் இது. இவ்வழியாக அவ்வநத்தையடை. அவ்வநம் யக்ஷ ராக்ஷஸர்களால் ரக்ஷிக்கப்பட்டு வருகிறது. அங்கே போய் உன் ஸாஹஸத்தைக் காட்டாதே. தேவர்களை மந்த்ரங்களால் பூஜி. அப்போது அவர்கள் உனக்கு ப்ரஸாதம் செய்வர்" என்றார்.

இவ்விதம் ஹநுமான் பல ஹிதோபதேசங்களைச் செய்து அநுஜ்ஞை பண்ணினவுடன், அன்பு மேலீட்டால் பீமஸேநனை ஆலிங்கநம் செய்தார். அப்போது பீமஸேநனுக்கு ஸர்வ ச்ரமமும் நீங்கி மஹா பலம் உண்டாயது. ஹநுமான், கண்களில் ஆநந்த பாஷ்பம் பெருக, "வீர! புறப்பட்டுப் போ. பிற்காலத்தில் என்னை ஸ்மரி. நான் இங்கிருப்பதை யாருடனும் சொல்லாதே. இப்போது அளகாபுரியினின்றும் தேவ கந்தர்வ கந்நிகைகள் இங்கு ஸஞ்சரிக்க வருவார்கள். உன்னைப் பார்த்து என் கண்கள் களித்தன. என்னுடைய தர்சநம் உனக்கு மங்களம் உண்டாக்கும்.

பீமஸேநன்:—"வாநர ச்ரேஷ்டரே! உம்முடைய அநுக்ரஹத்தை நிரம்பப் பெற்றேன். எனக்கு ஸர்வோபகாரமும் செய்தீர். என்னை க்ஷமிக்கவேண்டும். என்மீது க்ருபை செய்யவேண்டும். உம்மை நாதனாக உடைய எமக்கு இனி என்ன குறை? உமது தேஜஸ்ஸால் நாங்கள் ஸர்வ சத்ருக்களையும் ஜயிப்போம்."

ஹநுமான்—"பீமஸேநா! நீ என் ப்ராதா. உன்னிடம் எனக்கு ப்ரியம். நீங்கள் யுத்தோந்முகர்களாய் ஸிம்ஹ நாதம் செய்யும்போது, அந்த த்வநியை என் ஸ்வரத்தினால் வ்ருத்தி செய்கின்றேன். அர்ஜுநனுடைய த்வஜத்தில் நின்று தாருண சப்தங்களைச் செய்து உன் சத்ருக்களைப் பயமுறுத்துகிறேன்" என்று சொல்லிவிட்டு மறைந்துபோனார்.

---

* ஹநுமான் அப்பொழுதப்பொழுது கொண்ட விச்வரூபங்கள் ஆறு. அவையாவன:—

வனஞ்சேரிராமன் தனைக்கண்ட வழியி லொருவிச் சுவரூபம்
மலைமேலேறிக் கடல்பாய வகுத்த தொருவிச் சுவரூபம்
கனம்சேர் சீதைக் கடையாளம் காட்டி யொருவிச் சுவரூபம்
காணா மருந்து மலைதேடிக் காண வொருவிச் சுவரூபம்
இனம்சேர் பாதா ளத்தின்மகன் எதிர்ந்த தொருவிச் சுவரூபம்
ஈரைம் பதுவா யரக்கன்மிசை யெதிர்ந்த விசுவ ரூபமுதல்
அனந்த விசுவ ரூபமுள வதுலா சிற்றில் சிதையேலே
அனகா திரிநேத் திரவீர வனுமா சிற்றில் சிதையேலே.

அனுமார் பிள்ளைத் தமிழ்—சிற்றிற் பருவம்.9.

ஸ்ரீ:

செய்திகள்

கருடபுரம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன் திருநக்ஷத்ர மஹோத்வம்

நிகழும் ஸர்வதாரி ஸு. ஆடி மீ. 12உ (27—7—48) செவ்வாய்க்கிழமை, கருடபுரம் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன் திருநக்ஷத்ர மஹோத்ஸவம், ஆடி மீ. 8உ வெள்ளிக்கிழமை முதல் தொடங்கி, உபயவேதாந்த க்ரந்த பாராயணங்களுடன், ஸ்ரீ மதுராந்தகம் ஸ்ரீ ஸ்வாமியின் பூர்வாச்ரமத் திருமாளிகையில் விசேஷமாக நடைபெற்றது.

கருடபுரம் தி. ஈ. ஸ்ரீநிவாஸ தாஸன்.

* * * *

ஸ்ரீ தில்லஸ்தாநம் ஸ்வாமியின் ஸங்கல்ப மஹோத்ஸவம்

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம தில்லஸ்தாநம் ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகனுடைய இவ்வர்ஷத்து சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவம், ஆடி மீ. 6உ (21-7-48) புதன்கிழமையன்று, திருவஹீந்த்ரபுரம் ஸ்ரீ அஹோபில மடத்தில் விசேஷமாக நடைபெற்றது. இம்மஹோத்ஸவத்துக் கென்று ஸ்ரீ தேவநாதன் ஸந்நிதி தர்மகர்த்தா ஸ்ரீ உ.ப. K. S. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம் வங்கிபுரம் வித்வான் ஸ்ரீ. உ.ப. ரங்கநாதாசார்ய ஸ்வாமி முதலியோரும், மற்றும் பல உள்ளூர் ஸ்வாமிகளும், திருப்பாப்புலியூர் முதலிய வெளியூர்களி லிருந்து அநேக திருநாமங்களும் எழுந்தருளியிருந்து மஹோத்ஸவத்தைச் சிறக்க நடப்பித்து ஸ்ரீ ஸ்வாமியின் ப்ரஸாதத்துக்குப் பாத்ர மானார்கள். மஹோத்ஸவம் இனிது நடந்தேறிய பின்னர் 50, 60-திருநாமங்களுக்குத் ததீயாராதநம் விசேஷமாக நடைபெற்றது.

தூ. வரததேசிக தாஸன்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

ஸர்வதாரி ஸு புரட்டாசி (கந்யா) மீ

16—8—48	1உ	வியாழக்கிழமை	...	சூந்ய திதி; கந்யா ரவி – 22. 34; ஷடசீதி. [தர்ப்பணம்]
17—8—48	2உ	வெள்ளிக்கிழமை	...	அதிதி
18—8—48	3உ	சனிக்கிழமை	...	கந்யா பூர்ணிமா திதி
19—8—48	4உ	ஞாயிற்றுக்கிழமை	...	மஹாலய பக்ஷாரம்பம்
22—8—48	7உ	புதன்கிழமை	...	மஹா பரணி
25—8—48	10உ	சனிக்கிழமை	...	மஹா வ்யதீபாதம்
26—8—48	11உ	ஞாயிற்றுக்கிழமை	...	மத்யாஷ்டமி
27—8—48	12உ	திங்கட்கிழமை	...	நவமி திதி
28—8—48	13உ	செவ்வாய்க்கிழமை	...	தசமி – ஏகாதசி: திதி த்வயம்
29—8—48	14உ	புதன்கிழமை	...	ஸர்வ ஏகாதசி வ்ரதம்
2—9—48	17உ	சனிக்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை
3—9—48	18உ	ஞாயிற்றுக்கிழமை	...	நவராத்ரி ஆரம்பம்
8—9—48	23உ	வெள்ளிக்கிழமை		ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரம்:
11—9—48	26உ	திங்கட்கிழமை	...	மஹா நவமி
12—9—48	27உ	செவ்வாய்க்கிழமை	...	ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் திருநக்ஷத்ரம் : விஜயதசமி
13—9—48	28உ	புதன்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
15—9—48	30உ	வெள்ளிக்கிழமை	...	கந்யா சுக்ல த்ரயோதசி திதி
16—9—48	31உ	சனிக்கிழமை	...	கந்யா சுக்ல சதுர்த்தசி திதி: துலா ரவி 49 – 56 [மறுநாள் தர்ப்பணம்]

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ அழகியசிங்கருடைய சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவம்

ஸ்ரீமதஹோபில மடம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரம ஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்யபாதுகா ஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவம், நாளது ஆடி மீ. 6௳ (21-7-48) புதன்கிழமை யன்று திருவெவ்வுளூரில் ஸம்ருத்தமாக நடைபெற்றது. அன்று அநேக ஶிஷ்யர்கள் அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்து, அந்த மஹோத்ஸவத்தை ஸேவித்து, எல்லாரும் க்ருதார்த்ததையை அடைந்தார்களென்று நாம் அறிகிறோம். நமது ஸித்தாந்தம் ஓங்கி வளரும்படி செய்வதையே முக்ய வ்ரதமாகக் கொண்டு, அதற்குரிய ப்ரயத்நங்களைப் பஹுவாகச் செய்துவரும் ஸ்ரீ அழகிய சிங்கர் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருக்கவேண்டுமென்றும், அந்த ப்ரயத்நங்களெல்லாம் பூர்ண பல ப்ரதங்களாகி நம் ஸித்தாந்தம் யாதொரு ஹாநியுமின்றித் தழைத்து வளரும்படி ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் கடாக்ஷித்தருள வேண்டுமென்றும் நாம் ஹார்த்தமாய் ப்ரார்த்திக்கிறோம்.

*　　*　　*　　*　　*

அர்ச்சாவதாரமும் ஆலய ப்ரவேசமும்

இந்த ஸஞ்சிகையில் 'அர்ச்சாவதாரமும் ஆலய ப்ரவேஶமும்' என்னும் விஷயத்தைப்பற்றி 'வேதாந்த ஶிரோமணி' என்னும் ஒரு ஸங்கேதப் பெயரைக் கொண்டு ஒரு வித்வான் வ்யாஸம் ஒன்றை எழுதியிருக்கிறார். அதில் தென்படும் விஷயோபபாதநங்களையும் வாக்ய ஶைலியையும் பார்க்குங் காலத்தில், அது தர்க்க க்ரமத்தில் ஶிக்ஷிதமான புத்தியையும் அத்யாத்ம ச்ருதி ஸம்ப்ரதாயத்தில் விஶுத்தமான அந்த:கரணத்தையுமுடைய ஒரு மஹா வித்வானால் எழுதப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறதே யொழிய, ஆருருக்ஷுவான ஒரு ஸாமாந்ய ஶிரோமணியால் எழுதப்பட்டதாகத் தெரிய

வில்லை. அதே விஷயத்தைப் பற்றி மதுராந்தகம் வித்வான் ஸ்ரீ. உப. வீரராகவாசார்ய ஸ்வாமியும் ஒரு வ்யாஸத்தை அநுக்ரஹித்திருக்கிறார். அதுவும், ப்ரபலமான ப்ரமாணங்களை முன்னிட்டுப் பக்ஷபாத மிராத பெரியோர்கள் எல்லாராலும் ஒத்துக்கொள்ளக்கூடியதாகவே எழுதப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு வ்யாஸங்களி லிருந்தும் நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால்: ஹரிஜநாதிகளால் ப்ரவேசிக்கப்பட்ட ஆலயங்களில் தைவ ஸாந்நித்ய மில்லை யென்றும், அந்த ஆலயங்களுக்குப் போய்ப் பகவத் ஸேவையைச் செய்வது நிஷ்ப்ரயோஜந மென்றும் தெளிவாகத் தெரிகிறது. அப்படிச் செய்தால், பஞ்சம ஸம்பர்க்கத்தைப் பெற்ற ஸ்தலத்தில் ப்ரவேசிப்பது முதலான தோஷங்களால் ஸம்பவிக்கும் அசுத்திக்கு அவர்கள் பாத்ரமாகிறார்க ளென்றும், அந் அசுத்திக்கு அவர்கள் ப்ராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டு மென்றும், இந்த வ்யாஸங்களை எழுதினவர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். இவர்களைத் தவிர்த்து வேறு அநேக ஆஸ்திக வித்வான்களும் இம்மாதிரியான அநுஷ்டாநத்தையே கைப்பற்றி நடந்து வருகிறார்களென்று நாம் அறிகிறோம். இப்படி எவ்வித ஆக்ரஹமுமற்றிருக்கும் பெரியோர்கள் ஏக முகமாக ஸித்தாந்தம் செய்துவிட்டபடியால், ஆஸ்திகர்கள் எல்லாரும் இந்த விஷயத்தில் எவ்விதமான சங்கையையும் செய்யாமல், தங்கள் அநுஷ்டாநத்தை இப்பெரியோர்கள் நிர்ணயித்திருக்கும் ப்ரகாரம் செய்துகொள்ளவேண்டியதே தர்மத்திற்கு ஒத்ததாகும். ஸந்திக்த விஷயத்தில் சாஸ்த்ரஜ்ஞர்களுடைய நிர்ணயமே ப்ரமாணம்.

*　　*　　*　　*

ராஜாங்கத்தாரும் சீர்திருத்தங்களும்

நமது மஹர்ஷிகள் யோகத்ருஷ்டியால் ஜகத் வ்யாபாரங்கள் ஸம்பந்தங்களான விஷயங்கள் எல்லாவற்றையும் ஸாக்ஷாத்கரித்து, ஜகத் முழுவதற்கும் எது ஹிதமான உபாயமோ அதைத் தெளிவாக சாஸ்த்ர முகத்தால் விவரித்திருக்கிறார்கள். இவ்விதம் அவர்கள் ஜகத் ஹிதத்தைச் செய்தது, 'ஜ்ஞாநம் ஹ்ருதீவதிவ காரு—ணிகோ ஜ்ஞாதி' என்கிறபடியான மஹா காருணிகனான ஸ்ரீ பகவானுடைய கட்டளை. அந்தக் கட்டளைக்குக் கட்டுப்பட்டு அநாதி காலமாக ஜகத் வ்யாபாரங்கள் நடைபெற்று வந்தன. அந்தக் கட்டளையை மீறி யாராவது நடந்தால் அவர்களை அந்தந்தக் காலத்தில் இருந்த அரசர்கள் அந்தக் கட்டளைக்கு உட்பட்டு நடக்கும்படி செய்து வந்தார்கள். இப்பொழுது நமக்கு வாய்த்திருக்கும் அரசர்களோ வென்றால், சாஸ்த்ரங்களை மஹர்ஷிகள் வைஷம்ய புத்தியுடன் எழுதிவிட்டார்க ளென்றும், அந்த சாஸ்த்ரங்கள் காண்பிக்கும் மார்க்கம் ஒரு வகுப்பினருடைய நன்மையை மாத்ரம் உபதேசிக்கின்றன வென்றும், அவைகளை நம்முடைய புத்தி பலத்தைக் கொண்டும் லோகாநுபவத்தைக் கொண்டும் சீர்திருத்தம் செய்யவேண்டு மென்றும் மஹத்தான ப்ரயத்நங்களைச் செய்து வருகிறார்கள். சாஸ்த்ரம் சொல்வதற்கு விருத்தமாக அநேக ராஜாஜ்ஞைகளைப் பிறப்பித்து, சாஸ்த்ர மர்யாதையைக் குலைத்துவிட்டார்கள். நல்ல சட்டி பானைகள் இருந்த விடத்தில் உடைசல்களும் தூள்களும் தும்புகளுமே காணப்படுகின்றன.

இந்த ஜகத்தில் ஜனிக்கும் ஜந்துக்க ளெல்லாம், தங்கள் தங்கள் பூர்வ கர்மங்களுக்குத் தக்கவாறு பிறப்பை அடைகிறார்க ளென்பதை எல்லாரும் ஒத்துக்கொள்ளவேண்டும். நம்முடைய இஷ்டப்படி நாம் பிறப்பை அடைகிறோ மில்லை. பிறப்புக்குப் பூர்வ கர்மமே காரண மென்று ஒத்துக் கொள்ளா விட்டால், சிலர் த்ருட காயர்களாகவும், சிலர் ருக்ணர்களாகவும், சிலர் தனிகர்களாகவும், சிலர் தரித்ரர்களாகவும், இம்மாதிரியான பல் வகைப்பட்ட பிறவி பேதங்களுக்கு வேறு என்ன காரணம் சொல்லக் கூடும்?

“ തദ്യ ഇഹ രമണീയ ചരണാ അഭ്യാശോ ഹ യത്തേ രമണീയാം യോനിമാപദ്യേരന്............അഥ യ ഇഹ കപൂയ ചരണാ അഭ്യാശോ ഹ യത്തേ കപൂയാം യോനിമാപദ്യേരന് ”

[ஸம்ஸரிக்கும் ஜீவன்கள் தம்தம் கர்மங்களுக்குத் தகுந்தபடி பிறப்பை அடைகிறார்கள்; நல்ல கர்மங்களைச் செய்தவர்கள் நல்ல ஜன்மத்தையும், கெட்ட கர்மங்களைச் செய்தவர்கள் இளப்பமான ஜன்மத்தையும் அடைகிறார்கள்.] என்று உபநிஷத் சொல்லுகிறது. ஆனால் பிறவி காரணமாக ஒருவனும் அஹங்காரம் கொள்ளக்கூடா தென்றும், எவர்கள் அம்மாதிரியான அஹங்காரம் கொள்ளுகிறார்களோ அவர்கள் நரகத்தை அடைவார்க ளென்றும், கண்டநத்தை ஶாஸ்த்ரங்களில் காண்கிறோம்.

‘ ശ്രേയോർഥാനാം ഉപരതദൃഷ്ടിക്ഷേമഃ ’, ‘ തസ്മാദ്ബ്രാഹ്മണഃ വാണിജ്യം നിരഹങ്കാരസ്യ ച ക്ഷോഭകം ’

[ஐஹிகத்திலோ ஆமுஷ்மிகத்திலோ நன்மையை அடையவேண்டு மென்னும் விருப்ப முள்ளவர்கள் இந்த்ரியங்களை அடக்கிக்கொண்டு எவ்வித அஹங்காரமு மின்றிக்கே, தாமே ஸர்வோத்க்ருஷ்டர்கள் என்று நினையாமலும், தமக்கு ஏதாவது பெருமை யிருந்தால் அதை இருப்பதாகவே நினையாமலும் வர்த்தித்தல் வேண்டும்] என்று ஶாஸ்த்ரங்கள் விதிக்கின்றன. அரசர்கள் இதைப் புத்தியில் வைத்துக்கொண்டு, ஜனங்களுக்குள் தேஹ ப்ரயுக்தங்களான ஆசாராதிகளை மாற்றவேண்டு மென்னும் ஆக்ரஹத்தைத் தூர விலக்கி, ப்ரஜைகள் ஒருவர் மீது மற்றொருவர் அஸூயை கொள்ளாமல் எல்லாரும் ப்ராதாக்கள்போல் வர்த்தித்து வரும்படியான நற்குணத்தை உடைத்தாயிருக்கும்படி செய்வதற்கு உபயுக்தமான ஸாதகங்களான உபாயங்களைத் தேடுவதில் ப்ரயத்நப்பட்டார்களேயானால் அது தர்ம்யமாகும்; அது க்ஷேமத்தை விளைவிக்கும். ‘நாம் உயர்ந்தவர்கள்’ என்னும் அஹங்கார மன்றோ நமக்குப் பெரிய ஶத்ரு! தேஹ ப்ரயுக்தங்களான ஆசாரங்கள் பேதித்தால் மநோபாவமும் மாறவேண்டும் என்னும் நியமமில்லை. கணக்கற்ற இடங்களில் தேஹ ஸம்பந்தமாக நாம் அநேக கட்டுப்பாடுகளை அநுஷ்டித்து வருகையிலும், நமக்குள் பரஸ்பரம் அந்தரங்கமான ப்ரீதியும் ஹித புத்தியும் எவ்வித குறைவையும் அடையாமல் உன்மஸ்தகமாக இருப்பதைப் பார்த்திருக்கிறோம். சீர்திருத்தம் இந்த ப்ரக்ரியையில் செய்யப்பட வேண்டுமே யொழிய, த்ரிகால ஜ்ஞாநிகளால் ஜகத்தின் க்ஷேமத்தை உத்

தேஸித்து ஜநங்களுடைய பஹிரங்க வ்யவஹாரங்களில் விதிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை மாற்றுவது சீர்திருத்த மாகமாட்டாது. இதை நமது ராஜாங்கத்தார் உணரவேண்டும்.

*   *   *   *

நமது ஆசார்யர்களுடைய நிர்ணயங்களே ப்ரமாணம்

ஸ்ரீ பகவத் கீதையில் ஆஸுர ஸ்வபாவத்துக்கு மூல பூதமாக மூன்று ஹேதுக்கள் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கின்றன. அவை: காமம், க்ரோதம், லோபம் என்பன. இவைகளை ப்ரஸ்தாவித்துவிட்டு, பிறகு, “இவைகளைக் காட்டிலும் ப்ரதாநமான வேறு தோஷம் ஒன்றுண்டு; அது என்னவெனில்: பகவதநுஸாஸந ரூபமான ஸாஸ்த்ர மாகிற விதியை அநாதரித்து, ஸ்வச்சந்தாநுகுணமான மார்க்கத்தில் ப்ரவர்த்திப்பதே. அப்படி ப்ரவர்த்திப்பவர்களுக்கு ஐஹிக பலமுமில்லை, ஸ்வர்க்காதி பலமு மில்லை; அப்படியிருக்க: பரகதி என்பது அவர்களுக்குக் கிடைக்கமாட்டா தென்பதைச் சொல்லவும் வேண்டுமோ ?” என்று ஸ்ரீ கீதாசார்யன் உபஸம்ஹாரம் செய்திருக்கிறான். இவ்விடத்தில் ‘ஸாஸ்த்ரம்’ என்னும் ஸப்தம் வேதத்தையே முக்யமாகக் குறிக்கின்றது. ஸர்வாவஸ்தைகளிலும் ஸமஸ்த புருஷர்களுக்கும் வேதமே ஹிதத்தை அநுஸாஸிக்கிறதன்றோ ? மற்றை ஸ்ம்ருதி முதலியவைகளை நாம் அந்த ஸப்தத்தால் க்ரஹிப்பதானது, அவை அந்த வேதத்துக்கு அநுபந்தங்களாக இருக்கின்றன என்னும் காரணத்தாலேயே.

“ஆர்ஷம் தர்மோபதேஶம் ச வேதஶாஸ்த்ராவிரோதிநா।
யஸ்தர்க்கேணாநுஸந்தத்தே ஸ தர்மம் வேத நேதர:॥”

[வேத ஸாஸ்த்ரங்களுக்கு விரோத மின்றிக்கே எவர்கள் தர்ம நிர்ணயம் செய்கிறார்களோ, அவர்களே தர்மத்தை உள்ளபடி அறிகிறார்கள்] என்பது ப்ரஸித்தமான ஸமர்த்தநம். ஆகையால்தான்

‘தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்திதௌ’

[ஹே அர்ஜுநா! கர்மாநுஷ்டாநங்களிலோ, தத்வ விவேசநத்திலோ, இம்மாதிரியான ஸகல விஷயங்களிலும் வேதஸாஸ்த்ரமே ப்ரமாண மென்று நீ அறி] என்பது ஸ்ரீ கீதாசார்யனுடைய முடிவான உபதேஸம். ‘அந்த வேதத்தின் உட்பொருளை விவரிப்பதில் மஹர்ஷிகளுக்குள் மதிபேதம் ஏற்படுகின்றதே; அப்பொழுது எதை ப்ரமாணமாகத் தழுவுகிறது?’ என்னும் ஸங்கை ஏற்பட்டால், “ ‘தர்மஸ்ய தத்வம் நிஹிதம் குஹாயாம்’ என்று மஹர்ஷிகளுக்குங் கூட வருந்திப் பதவிந்யாஸம் பண்ணவேண்டியிருக்கிற நிலங்களில், ‘மஹாஜநோ யேந கத: ஸ பந்தா:’ என்கிறபடி ச்ருதி ஸ்ம்ருதி ஸரணரான பூர்வாசார்யர்கள் கண்டக ஸோதநம் பண்ணி நடந்தவழியிலே நடக்கையாலே நமக்கு வருவதொரு தப்பில்லை” என்னும் ஸ்ரீ தேஸிகனால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள திவ்ய ஸூக்தியே நமக்குக் கதி.

இப்பொழுது இதைப்பற்றிப் பேசுவதற்கு என்ன உத்திதி என்று கேட்கலாம். "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையில், நமது பூர்வாசார்யர்களுடைய திவ்ய ஸூக்திகளுக்கு விருத்தமாகச் சிலர் அநுஷ்டாந விபர்யயங்களையும் தத்வ நிர்ணயங்களையும் உபதேசித்து எழுதிவருகிறார்களே! அதை நாம் அச்சுப் பதிப்பித்து வெளியிடுகிறோமே! இது நமது பத்ரிகைக்கு அநுரூபமா?" என்று ஶங்கித்து, 'நாமும் அதை ஆமோதிக்கிறோம்' என்று நினைக்கிறார்கள். இந்த நினைவு சரியான தன்று என்பதைத் தெரிவிக்கும் பொருட்டே நாம் இதை ப்ரஸ்தாவித்தோம். அம்மாதிரியான வ்யாஸங்களை ப்ரசுரம் செய்வதானது, அவைகளை நாம் ஆமோதநம் செய்வதாகமாட்டாது. 'நமது பரிபந்திகள் நம்முடைய கொள்கைகளைப் பற்றி என்ன சொல்லுகிறார்கள்?' என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டியது அவச்ய மன்றோ? அவைகளை மறுத்து வ்யாஸங்களும் ப்ரசுரிக்கப்படுகிறபடியால், விஷயங்களின் ஸாத்வஸாது பாவத்தை விவேகிகள் நன்கு அறியக்கூடும். நாம் ஸம்பந்தப்பட்ட பர்யந்தம், நமது ஆசார்யர்களால் அநுக்ரஹிக்கப்பட்ட நிர்ணயங்களே நமக்கு ஶரணம் என்பது நமது துணிபு.

* * * *

ஜந்மாதி லக்ஷணத்தைப் பற்றிய ஒரு ஸந்தேஹம்

ப்ரஹ்ம ஸூத்ரத்தை அநுக்ரஹித்த ஸ்ரீ வ்யாஸ பகவான், பரப்ரஹ்மத்துக்கு லக்ஷணம் சொல்லுகையில், 'ஜந்மாத்யஸ்ய யத:' [இந்த விசித்ரமான ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளயங்கள் எதைக் காரணமாகக் கொண்டு நடைபெறுகின்றனவோ, அதுவே பரப்ரஹ்மம்] என்று அதன் லக்ஷணத்தை விபூதியையிட்டு விவரித்திருக்கிறார். இது, 'யதோ வா இமானி பூதானி ஜாயந்தே' இத்யாதியான ச்ருதியை ஆதாரமாக உடையது. ச்ருதியில் இதைத் தவிர்த்து, 'ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் ப்ரஹ்ம' என்பது போன்ற வேறு வாக்யங்கள், குணங்களை யிட்டு ப்ரஹ்ம லக்ஷணத்தைச் சொல்லுகின்றன. இந்த வாக்யங்களை அநாதரித்து, ஜகத்தின் ஜந்மாதி காரணத்வத்தை லக்ஷணமாக எடுத்து, ஸ்ரீ வ்யாஸ பகவான் ஸூத்ரத்தை அநுக்ரஹிப்பானேன் என்னும் ஒரு ஶங்கை ஜநிக்கக் கூடும். ஸ்ரீ ச்ருதப்ரகாஶிகாசார்யர் அதற்குப் பின் வரும் ஓர் ஸமாதாநத்தை அநுக்ரஹித்திருக்கிறார். "பகவத் ஸ்வரூபம் ஜிஜ்ஞாஸ்யமாக இருப்பதுபோல், அவனுடைய விபூதிகளும் நமக்கு ஜிஜ்ஞாஸ்யங்களாகிறபடியால், அவை இரண்டுக்கும் ப்ரதீதி எந்த லக்ஷணத்தால் ஏற்படுகின்றதோ அதுவே க்ராஹ்யம். எது ஸத்யமோ, எது ஜ்ஞாநமோ, எது அநந்தமோ அது ப்ரஹ்மம் என்று குணங்களைச் சொல்லி அந்த ப்ரஹ்மத்தை விவரித்தால், ஸ்வரூபத்தைக் காட்டிலும் வெளிப்பட்டதாக இருக்கும் விபூதிக்கு ப்ரதீதி ஏற்படாமல் போய் விடும்; ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளயங்களை விஷயமாகவுடைய விபூதியைக் கொண்டு ப்ரஹ்மம் லக்ஷிதமானால், அந்த விபூதியை நியமநம் செய்வது முதலான குணங்களும் அதற்குள் அடங்கி நிற்கின்றன வாகையால், குணங்களுக்குப்போல விபூதிக்கும் ஜிஜ்ஞாஸ்யங்களான விஷயங்களுக்குள் அந்தர்ப்பாவம் ஏற்படு

கின்ற தென்பதை ஜ்ஞாபிக்கும் பொருட்டு இம்மாதிரி ஸ்ரீ வ்யாஸர் ஸூத்ரித்தார்." இது தான் ஸ்ரீ ச்ருதப்ரகாஸிகாசார்யருடைய ஸமாதாநம். ஆனால் 'இப்படிச் சொல்வதால் ஜந்மாதிகளுக்கு விஷயமாகிற இந்த லீலா விபூதிக்கு மாத்ரம் அந்தர்ப்பாவம் ஏற்படுகின்றதே யொழிய, ஜந்மாதிகளுக்கு ப்ரஸக்தியிராத த்ரிபாத் விபூதிக்கு அந்தர்ப்பாவம் ஏற்படவில்லையே' என்று ஓர் ஆக்ஷேபம் ஜநிக்கலாம். இதற்கு ஸமாதாநமாக, 'த்ரிபாத் விபூதியும் இவ்விடத்தில் க்ரஹிக்கப்படுகின்றது; த்ரிபாத் விபூதிக்கு ஜந்மம் முதலியவை அப்ரஸக்தமானாலும், 'யத்ப்ரயந்தி' என்னும் ச்ருதி வாக்யத்தில் காணப்படும் 'ப்ரயந்தி' என்னும் ஶப்தம் ஆத்யந்திக லய ரூபமான மோக்ஷத்தையும் குறிக்குமாகையால், முக்தர்களுக்கு ப்ராப்ய மாகிற ப்ரஹ்மத்தினிடத்தில் த்ரிபாத் விபூதிக்கு அந்தர்ப்பாவம் ஸித்திக்கின்ற தன்றோ?' என்று அநுக்ரஹித்திருக்கிறார்.

இப்படியானால், மற்று மொரு ஸந்தேஹம் ஜநிக்கின்றது. ப்ரஹ்மம் ஜகத்திற்கு உபாதாந காரண மென்றும், அதுவே நிமித்த காரண மென்றும் நமது ஸித்தாந்தம் சொல்லுகிற தன்றோ? கீழ் விவரித்திருக்கிற ப்ரகாரம் இந்த ச்ருதி வாக்யம் விபூதி விஶிஷ்டமான ப்ரஹ்மத்திற்கு ஜகத் காரணத்வத்தைச் சொல்லுகிறபடியால், அந்த வாக்யத்தை விஷயமாகவுடைய இந்த ஸூத்ரம், எப்படி ப்ரஹ்மத்துக்கு நிமித்த காரணத்வத்தை ஸாதித்துக் கொடுக்கிற தென்று சொல்லக் கூடும்? நிமித்த காரணத்வம் விஶிஷ்ட ப்ரஹ்ம நிஷ்டமன்றே; அது விஶேஷ்ய பூத சுத்த ஸ்வரூப நிஷ்ட மன்றோ? சுத்த ஸ்வரூப நிஷ்டமாயிராத ஜகத் காரணத்வம் எப்படி அந்த ஸ்வரூபத்திற்கு லக்ஷணமாகும்? ஒரு வஸ்துவின் அஸாதாரணமான தர்ம மன்றோ அந்த வஸ்துவின் லக்ஷணமாகச் சொல்லப்படக் கூடும்? இத்யாதியான ஶங்கைகள் உதிக்கின்றன. இவைகளுக்கு ஏற்ற ஸமாதாநத்தை நமது ஸுஹ்ருத்துக்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

வஈ தே:—ஆனல் அவன் வேண்டாம். க்ரீஷ்ம ருதுவுக்கு அடுத்ததான வர்ஷ ருதுவின் அதிதேவதையானவன் இதோ தங்கள் எதிரில் பூர்ண கும்பத்துடன் ஸேவைக்காகக் காத்து நிற்கிறன். இவனையாவது வரவேற்றுத் தங்கள் தாபத்தைத் தணித்துக்கொள்ளலா மல்லவா ?

பகவான்:—சரிதான்; அவனைப் பற்றிய ப்ரஸ்தாவம் எதற்கு? அவன் எப்படிப்பட்டவன் தெரியுமா! மித்ர த்ரோஹி. ஸூர்யன், உலகிலுள்ள ஒரு துளித் தண்ணிரும் விடாமல் தன் கிரணங்களால் இழுத்து இவனுக்குக் கொடுத்து உதவுகிறன். இத்துஷ்டனே செய்த நன்றியை மறந்து, தனது நண்பனை மறப் பதிலேயே கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறன். இவனை நமது அருகில் சேர்க்கலாமா? அல்லது நம்பத்தான் நம்பலாமா?

வஈ தே:—ஆனல் அவனும் பயனில்லை போலும். போகட்டும். இதோ ஶரத்ருதுவின் அதிதேவதையானவன் தங்கள் கட்டளைக்குக் காத்திருக்கிறன் திக்குக்க ளெல்லாம் தெளிந்து விளங்குகின்றன. இவன் வருகையினலாவது தங்கள் தாபம் சற்றுத் தணியும் என்று நம்புகிறேன்.

பகவான்:—இவனல் தான் என்ன உபயோகம்? இவன எனக்கு உதவி புரிபவன்? நன்ருகக் கூறினையே! விரஹிகளுக்கு ஒரு முஹூர்த்தத்தை ஒரு யுகமாகச் செய்யக்கூடியவ னல்லவா இவன்?

வஈ தே:—ஆனல் பகவானுக்கு இவர்களால் ஒருவித கைங்கர்யமும் புரிய ஸாத்யமில்லை. இதோ ஹேமந்த ருதுவின் தலைவனும் ஶிஶிர ருதுவின் தலைவனும், இருவரும் ஒன்றுகூடித் தங்கள் ஆஜ்ஞையை ஶிரஸ்ஸால் வஹிக்கும் எண்ணத்துடன் கைகட்டிக் காத்து நிற்கின்றனர். இவர்களாகிலும் தங்கள் வேதனையைச் சற்றுத் தணிப்பார்கள் என்று எண்ணுகிறேன். எம்பெருமான் கடாக்ஷிக்கவேண்டும்.

பகவான்:—அட கஷ்டமே! இவர்கள் மஹா பாதகர்க ளன்ருே? இவர்களா என் கஷ்டத்தைத் தணிப்பவர்கள்? இருவரும் சத்ருக்களைப் போல் வெளியில் குளுமையாகவும் வயிற்றில் நெருப்புமாகவு மல்லவோ இருப்பார்கள்? இவர்கள் எனது தாபத்தைப் பதின் மடங்கு அதிகமாகச் செய்பவர்கள். விரைவில் அவர்கள் என் கண் முன் நில்லாமல் செல்லட்டும்.

வஈ தே:—[தனக்குள் மிகவும் வருத்தத்துடன்] ஆஹா கஷ்டம்! இப்பொழுது என்ன செய்வது? நான் ஸகல ருதுக்களையும் ஒன்ருகக் கூட்டினல் பகவானுடைய மன்மத ஜ்வரத்தின் தாபம் தணியுமென்று எண்ணினேன். எனது ப்ரயத்நம் களர் நிலத்தில் விதைத்த விதைபோல் ஆயிற்று. ஜ்வரத்தின் தீவ்ரம் பகவானின் நாபியைப் போய்ப் பிடித்து வேரூன்றி விட்டது. அந்நாபீ கமலமானது வாடி வதங்கிவிட்டது. அதில் வஸிக்கும் பாரதியின் பர்த்தாவான நான்முகன், தனக்கு வஸிக்க இடமின்றித் தவித்து வேறு கமலங்களைத் தேடுகிறன். இப்பொழுது எவ்வித உபாயத்தினல் பகவானை ஸந்தோஷப்

படுத்துவேன்! அவர் வேதனை சற்றுகிலும் தணியும் வகை யறியேனே! [ஏதோ நினைவு வந்தவன்போல்] இருக்கட்டும்; இதையாகிலும் செய்து பார்ப்போம். [வெளிப்படையாய்] ஸ்வாமீ! இப்பொழுது தங்கள் சந்த்ர மணி சாலைக்கு வடக்கில் சிறிய அழகிய உத்யான வநம் ஒன்று உள்ள தல்லவா? அதற்குள் அழகிய மலர் மாளிகை ஒன்று அமைந்துள்ளது; அவ்விடம் சென்று சற்று இளைப்பாறினால் நலம் என்று தோன்றுகிறது.

பகவான் :— ஆகட்டும்; அதுவும் செய்து பார்ப்போம். [எழுந்திருந்து நந்தவநத்திற்குள் சென்று பார்ப்பது போல் அபிநயித்து] இக் கொடி வீடானது ஸகல பரிமளங்களுக்கும் இருப்பிடம். குளுமை அரசாளும் ராஜ தாநி; ம்ருதுத்தன்மைக்கு உறைவிடம்; சிங்கார ரஸத்தின் ஸங்கேத உப்பரிகை; வஸந்த லக்ஷ்மியின் அந்தப்புரம்; மந்மதனுடைய ஸிம்ஹாஸநம். இம் மலர் மாளிகை எனது உள்ளத்தை மிக்க ஆநந்த மூட்டினும், அத்யந்தம் மோஹத்தையும் உண்டுபண்ணுகிறது.

வந தே :—ப்ரபோ! இவ்விடம் லதா க்ருஹத்தில் பனி நீரினால் தோய்ந்த புஷ்பப் படுக்கை அமைக்கப்பட்டிருக்கிறது. அதை அலங்கரிக்க வேண்டும். அதுவாகிலும் தங்கள் தாபத்தைச் சிறிதளவு தணிக்குமென நம்புகிறேன்.

பகவான் :— [அதன் ஸமீப மடைந்து படுக்கையில் உட்காருகிறார்; பிறகு ஸஹிக்க வொண்ணாத தாபம் அடைந்தவர்போல் அபிநயித்து] இப்புஷ்ப வீடு பார்ப்பதற்கு வெகு அழகாகவே அமைந்துள்ளது. முன்புறம் கதம்ப மலர்களும், பின்புறம் மகிழ மலர்களும், இரு பக்கங்களிலும் மருதாணி மலர்களும், தாமரை மலர்களினால் கட்டிய மேல் கட்டும் அத்யத்புதம். ஆனால் இந்த அலங்காரங்களைப் பார்க்குமளவில், பஞ்சாக்நி மத்தியில் தவம் செய்து தவிக்கும் யோகிகளைக் காட்டிலும் பதின்மடங்கு அதிக மோசமாகவே என் நிலைமை ஆகும் என்பதில் ஸந்தேஹமே யில்லை.

வந தே :— நான் என்ன செய்வேன்? ஸகல இந்த்ரியங்களுக்கும் ஸந்தோஷத்தைக் கொடுக்கும் ஸாமக்ரிகளை ப்ரயாஸையுடன் சேகரித்து வைத்திடினும், எம்பெருமான் மனம் கொஞ்சமும் ஸமாதாநத்தையும் ஸந்தோஷத்தையும் அடையவில்லையே!

பகவான் :— ஆம்; உண்மை; நீ செய்தது ஒன்றும் பயன்படவில்லை. புதிதாக இளந்தளிர்களைக் கொண்டு எனக்குப் படுக்கை பரப்பினாய்; அது எனக்குத் தளிர்ப் படுக்கையாகவா உள்ளது? கல்லைக்காட்டிலும் கடினமாக வன்றோ தேஹ மெங்கும் உறுத்துகிறது? பலவித ரஸங்களின் வாஸனையைச் சொரியும் மேல்கட்டை வெகு ச்ரமப்பட்டுக் கட்டியிருக்கிறாய் ஆனால் அதில் ஒரு வாஸனையேனும் ரஸமேனும் ஒன்றும் எனது மூக்கிற்கு எட்டவில்லை. ஜந்மாந்தர வாஸனைதான் தலைதூக்கி நிற்கிறது. மகிழ மலரின் வாஸனையானது

என் ஆத்மாவை ஶாந்தமுறச் செய்வதற்குத் திறமை யுள்ளதென்று எண்ணுகிருய்? அது ஆவியை உலர்த்துகிறது. உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அப் பெண்மணி என் ஸமீபத்தை யடைவாளாகில் இவைகளெல்லாம் தம் ஸ்வபாவ குணத்தை யடையும்; நானும் அத்யந்தம் ஸுக மடைவேன். [மறுபடியும் யோசித்து] என்ன ஆச்சர்யம்! அவள் விஹாரமானது மனத்திற்கும் கிட்டாதது; அவ்வித மிருக்க, என் மனம் தனக்குக் கிட்டாத பொருளான வெகு தூரத்தி லிருக்கும் அவளை நினைத்து என் இவ்விதம் வருந்துகிறது? எண்ணுத எண்ண மெல்லாம் எண்ணி எண்ணி ஏன் ஏக்க மடைகிறது? [இவ்விதம் கூறி மூர்ச்சை யடைகிருர்.]

வஙதே.— [மிகவும் பயத்துடன்] ஆஹா! என்ன கஷ்டம்! பரிமள த்ரவ்யங்களெல்லாம் ஒன்று சேர்த்தேன். அவைகளும் மேன்மேலும் ஸந்தாபத்தை வளரச் செய்தன. முடிவில் மோஹமு முற்றனரே. இத்தகைய கஷ்ட தசையில் எம்பெருமான் உயிர்த்தோழன் காலவனும் அருகி லில்லையே! அவன் ஏன் இச்சமயம் அறியாமல் இவ்வளவு தாமதம் செய்கிருன்? வாஸந்திகாவின் செய்கைகளை அறிந்து வருவதின்பொருட்டு எம்பெருமான் அவனை அனுப்பினுர். அதை விரைவில் அறிந்து வராமல் விளம்பம் செய்கிருனே!

[இவ்வாறு இவள் சிந்திக்குமளவில் அரங்கத்தில் விதூஷகன் வந்து பகவானை வணங்கி]

விதூ:— ஸ்வாமி! கிட்டியது கல்யாணம். கிட்டியது கல்யாணம். அவ்வித மிருக்கையில், தங்களுக்கு ஏன் இத்தகைய வேதனையும் விசாரமும்?

பகவான்:— [அவன் வார்த்தையைக் கேட்காதவர்போல்] ஓ வாஸந்திகா! 'அவள் மங்கள முடையவள்; அவள் நிர்த்தோஷமானவள்' என்று என் மனம் அவளையே எண்ணி எண்ணி ஏக்க முறுகிறது. முகமோ உலர்கிறது; தைர்யமும் அதைப் பின் தொடர்ந்த அறிவும் நழுவி ஓடுகின்றன. என் செய்வேன்!

விதூ:— [தனக்குள்] இது என்ன! இப்பொழுது நான் வந்திருப்பதைக் கண்டும், ப்ரபுவுக்கு ஏன் இவ்வளவு அநாதரவு? என் பேச்சு அவர் செவியில் புகவில்லை போலும். [சற்று உரக்கக் கூறுகிறேன் என்று மறுபடியும்] ப்ரபோ! கிட்டியது கல்யாணம். அவ்வித மிருக்கையில் தங்களுக்கு ஏன் இத்தகைய வேதனையும் விசாரமும்?

பகவான்:— [அவன் வார்த்தையைக் கேட்டு அவனை உற்று நோக்கி ஸந்தோஷத்துடன்] நண்பா! என்ன உனது மேதை! 'கிட்டியது' என்னும் வார்த்தையை முன்னதாகச் சொல்லி, 'கல்யாணம்' என்னும் பதத்தைப் பிற்பாடு கூறினு யல்லவா? முதலில் காரியஸித்தியைக் கேட்ட வளவில் எவ்வளவு ஆனந்த முண்டாகிறது? இது, எனது பரம தாஸனுகிய ஆஞ்ஜநேயன் 'கண்டேன் ஸீதையை' என்று புகன்று என் உயிரைக் காப்பாற்றிய ஸம்பவத்தை நினைப்பூட்டுகிறது.

விதூ :— தேவா! இவ் வநதேவதையானவள் தங்களுக்கு ஶுச்ரூஷை செய்து சோர்வடைந்திருப்பதாகத் தெரிகிறது. இனித் தங்கள் விவாஹ மஹோத்ஸவத்தின் பொருட்டுக் கருடாசல வந ப்ரதேசங்கள் அனைத்தும் அலங்கரிக்கவேண்டு மல்லவா? ஆகவே, அவ்வன்னைக்கு விடை கொடுத்து அனுப்ப வேண்டுகிறேன்.

பகவான் :— ஆம்; நீ கூறுவது வாஸ்தவம். அவள் மிகவும் ச்ரமப் பட்டாள். இப்பொழுது அவச்யம் போய் வரலாம்.

வந தே :—'அவ்விதமே ப்ரபுவின் ஆஜ்ஞைப்படி' என்று கூறி மறைந்தாள்.

பகவான்:—நண்பா! அப்பெண்மணி உன் கண்ணுக்கு எவ்விதம் தென் பட்டாள்? லாவண்யமாகிற அம்ருதத்தினுடைய அலைகளினால் அபிஷேகம் செய்யப்பட்டவளாயும், நறுமணங்களுக்கும் மணத்தை ஊட்டும் ஸ்வபாவ ஸித்தமான மணங் கமழும் சந்தநக் குழம்பினால் பூசப்பட்டவளாயும், ஸௌகுமாரமான மலர்களினால் அலங்கரிக்கப்பட்டு அவைகளுக்குக் கௌரவத்தைக் கொடுத்தவளாயும், அவளுடைய தோழிகளினால் உபசரிக்கப்பட்டவளாயும், ரதீ ரமணனான மந்மதனுடைய ராஜ்யத்திற்கு அதிதேவதையுமான அப்பெண் மணியின் நிலைமை எவ்வித மிருந்தது? விரைவில் சொல்.

விதூ:—ப்ரபோ! சற்றுக் கவனமாய்ச் செவி சாய்க்கவேண்டும். நாம் முதல் முதலில் வநதேவதையின் ஆலயத்தின் முன்பக்க மிருக்கும் மாதவிப் பந்தலின் கீழ் மறைந்து நின்று தங்கள் அன்பனைக் கண்டோ மல்லவா? ஏகாந்தமானதும் ரமணீயமானதுமான அதே இடத்தில்தான் நான் இப்பொழுது அவளைப் பார்த்தேன். ஸகிகள் அவள் தாபத்தைத் தணிப்பதின் பொருட்டுப் பலவித உபசாரங்கள் செய்துகொண்டிருந்தனர்.

பகவான்:—ஆம்; அதன் பிறகு என்ன ஸமாசாரம்?

விதூ:—தோழிமார்கள் செய்யும் ஶைத்யோபசாரத்தை வெறுத்து, அதை வேண்டாமென்று தடுத்தாள்; மந்மத தாபத்தினால் மிகவும் துன்புற்றாள்.

பகவான்:—[வ்யஸநமும் ஸந்தோஷமும் ஒன்று கூடியவராய்] என்னுடைய ப்ரிய நாயகியின் மனம் தாபத்தை யடைந்தவளவில் எனது உள்ளம் குளிர்ச்சியை அடைகிறது. அப்பெண்கொடி மனம் தளர்ந்து தவிக்கிறாள் என்னும் சொல்லைக் கேட்டவுடன் என் மனம் தைர்யத்தை அடைகிறது. அவளுடைய சரீரமானது மெலிந்து இளைத்துள்ளது என்று கேட்ட என் அங்கம் வளர்ச்சியை யடைகிறது. ஆனால் கொடிபோன்ற புருவத்தையுடைய அப்பெண் என்னுடைய விரஹத்தினால் தவிப்பதைக் கேட்டு வருத்த முண்டாகிறது. இப் பொழுது இப்படி வருந்தினாலும், பிறகு அவள் ஸந்தோஷத்தை யடையப் போகிறாள். பிறகு என்ன பார்த்தாய்?

விது:—தோழிமார்கள், 'ஸகீ! வாஸந்திகே! இவ்வுத்யாநவநத்தினுடைய ஸௌந்தர்யத்தைச் சற்றுக் கண்திறந்து பார். இவ்வண்டுகள் எவ்வளவு மதுரமாய் கானம் செய்கின்றன? அவைகளைச் சற்றுக் கேள். பற்பல மலர்களை விநோதமாய்ப் பார்த்து மனத்தை ஸந்தோஷப்படுத்திக்கொள்' என்று வெகுவாய் வேண்டினர். அதைக் கேட்ட அவள் கீழ்க்கண்ட பொருள்கொண்ட ஒரு பாட்டைப் பாடினாள்.

"தோழிமார்களே! கேளுங்கள். இவ்வழகிய கொடிவீட்டில் உல்லாஸமாய் அமருவேன். செவிகளுக்கு அமுதூட்டும் குயிலின் இன்னிசையைக் கேட்பேன். மந்தமாருதத்தை எதிர்நோக்கி ஆவலுடன் தழுவி யணைப்பேன். மலய பர்வதத்தில் உண்டாகிய நறுமணங் கமழும் சந்தனக் குழம்பை மார்பில் ஆசையாய்ப் பூசிக்கொள்வேன். எப்பொழுது? எனது அன்பன் இவ்விடம் என் கண்முன் காட்சி யளித்தபோது. இல்லையேல், அவன்மேல் கொண்ட காதல் வீண். அவன் வரமாட்டான் என்று தெரிந்த க்ஷணத்தில்........"

பகவான்:—ஆஹா! இவ்வபிலாஷை மிகுந்த ஸாஹஸச் செய்கையே. நான் வராமல்போனால் இவ்விதம் செய்யத் துணிந்தனளே? இது மிகவும் மெச்சத்தக்க தைரியம்!

விது:—[சற்று ஆக்ஷேபனையுடன்] இது என்ன புதிர்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே? அத்யந்தம் சீதளமாகிய மந்தமாருதம் சந்தனம் புஷ்பம் முதலிய வஸ்துக்களை விரும்புவதில் என்ன ஆச்சர்யம்? இது எப்படி ஸாஹஸ காரியமாகும்?

பகவான்:—ஸாஹஸச் செய்கைதான். விரஹிகளின் துன்பத்தைக் கேள். அவர்களுக்குச் சந்தனம் செந்தணலைப்போல் கொளுத்தும்; ஆகையால் அது நிந்திக்கத்தக்கது. தென்றலும் நிலவும் பிரிந்தவர்களை ஒரு க்ஷணம் ஓய்ச்சலொழிவின்றிப் படுத்தாத பாடு படுத்தும். இதோடில்லை. மன்மதனோ ஹ்ருதயத்தைக் கடைந்து ஆவியை எடுப்பதில் பரம நிபுணன். நறுமணங் கமழும் மலர்மாலையோ தாபத்தை மேன்மேலும் வளர்க்கும் கிழங்கு.

விது:—ஓஹோ! அப்படியா? பிரிந்த காதலர்கள் பாடு இவ்வளவு கஷ்டமா? ஆம்; அநுபவசாலிகளாகிய தங்களைப் போன்றவர்களுக் கன்றோ அது தெரியும்! எனக்கென்ன தெரியும்?

பகவான்:—ஸரிதான்; இருக்கட்டும் உன் விநோதப் பேச்சு. பிறகு அதற்குமேல் நடந்த விஷயங்களை விவரமாய்ச் சொல்.

விது:—பிறகு தோழிகள் அவளை நோக்கி, 'ஸகீ! நீ இவ்விதம் செய்யலாமா? உனது அழகிய அங்கங்கள் ஆபரணங்களுக்கே தனி ஶோபையை அளிக்குமே. நீ ஹாரம் கங்கணம் முதலிய பூஷணங்களை அணியாமல், அவைகளை உபேக்ஷை செய்லாமா?' என்றனர். அதைக் கேட்ட உங்கள் காதலி எத்

தகைய உத்தர மளித்தாள் தெரியுமா? 'தோழிகளே! என் அவயவங்களை நீங் கள் ச்லாகிப்பது வீண். பாக்யஹீநங்களான அவைகளினல் என்ன பயன்? எனது கண்களை வெகுவாய்க் கொண்டாடுகிறீர்கள். அது, அவைகளின் அத் ருஷ்டத்தைப் பற்றிப் புகழ்ந்ததாகுமோ? எம்பெருமானைக் கண்ணாரக் கண்டு களித்த கண்களின் பாக்யம் தான் பாக்யம். என்னுடைய கைகளோ அதரமோ மற்றும் ஶரீரத்தில் வேறு எந்த அவயவங்களோ, அப்புருஷோத்தமனின் சேர்க்கை இன்பத்தை அநுபவிக்கவில்லை. என்னுடைய கண்கள்தான் என் அன் பன் கண்களுடன் கலந்து உறவு கொண்டாடிக் களித்தன. ஆகையால் அவை களே அத்ருஷ்டசாலிகள்.

பகவான்:—ஆஹா! என்னைப்போலவே அவளும் அநுபவ ரஸத்தை நினைத்து நினைத்து இன்புறுகிருள். என் கண்ணும் அவள் கண்ணும் கலந்து இன்ப உணர்ச்சியை அநுபவித்தன வல்லவா? [மறுபடியும் சற்று ஆலோசித்து] எனது ப்ரிய நாயகியின் புருவக்கொடி ஒருமுறை சற்று வளைந்தது. அது தன்னு டைய அபிப்ராயத்தை எவ்வளவு தெளிவாய்த் தெரிவித்தது! அது மிகவும் மனோ ஹரமானது; அத்யந்தம் ஆதரவுடன் கூடியது; பரமாநந்தத்தை மூட்டத்தக்கது. அது தனது ஆசையை ஸூசித்தது வெகு அழகு! அவள் அன்பு ததும்பும் தனது கடைக்கண்ணால் என்னை நோக்கினளே! அவ்வின்பம் ஒன்றே போதுமே. அதுவே எனக்குப் பரம ஸுகம். அதுவே எனக்கு ஸர்வ மங்களங்களுக்கும் இருப்பிடம். அதுவே எனக்குப் பரதேவதை. அவ்வின்பத்திற்கு நிகர் மற்றெது உள்ளது? ஸரி இருக்கட்டும்; ஏன் நான் இப்படி உன்மத்த ப்ரலாபம் பண்ண வேணும்? அதன் பிறகு நடந்த ஸமாசாரம் என்ன?

விதூ:—வேறு என்ன விஷயா? அவள் ஸ்நாநம் செய்வதில்லை. ஆஹா ரம் உட்கொள்வதில்லை. இவைகள் இப்படியிருக்க, சந்தநம் புஷ்பம் ஆபரணங் கள் அணிவதைப் பற்றிச் சொல்லவேண்டுமா? அனைத்திலும் வெறுப்பு. உயிர் நேசிகள் இவள் மனத்தை ஸந்தோஷப்படுத்தும்பொருட்டு ஏதாகிலும் விநோத மாகப் பேசினல் அதில் அவள் மனம் செல்வதேயில்லை. போகட்டும்; அவள் வள ர்க்கும் கிளியின் பேச்சையாவது கேட்டால் சற்று ஆச்வாஸம் உண்டாகுமோ வென்று, அவள் ஸகி அக்கிளியை ஸமீபத்தில் கொண்டு வந்தாள். அது 'ராமா, க்ருஷ்ணு, நரஸிம்ஹா, நாராயணு' வென்று கூறும் பகவந்நாமங்களைக் கேட்பதி லும்கூட அவள் மனம் அடியோடு ஆசை யொழிந்து நிற்கிறது. அவ்வித மிருக்க: அதைக் கொஞ்சிக் குலாவிப் பாலூட்டும் ஸம்பவம் ஏது? ஒரே சிந்தனையில் ஆழ்ந்திருக்கு மவளைத் தோழிமார்கள் ஆயிரந்தடவை அழைப்பினும் அவர்கள் வார்த்தை அவள் காதில் விழுந்தால்தானே பதில் அளிப்பாள்? மேன் மேலும் அதிகரிக்கும் தாபத்தினல், க்ருஷ்ண பக்ஷத்துச் சந்த்ர ரேகையைப் போல் நாளுக்கு நாள் அவள் சரீரம் கேவலம் துரும்பாய் இளைத்து வருகிறது. வெளுத்திருக்கும் வெளுப்போ கூறத் தரமல்ல. தரையில் படுத்து இங்கு மங்கும் புரளுகிருள். சற்று நினைவு; சற்று மூர்ச்சை; இவ்வித நிலைமையி லிருக் கிருள்.

பகவான்:—ஐயோ! என்ன கஷ்டம்! என்னுடைய புஜத்தைத் தலையணையாய் வைத்துப் படுக்கவேண்டியவள் தரையில் படுத்துப் புரளுகிறாளே! எனது தொடையில் படுத்து உறங்கவேண்டிய ஸுகுமாரி மண்ணில் படுக்க நேர்ந்ததே? அத்துஷ்டனாகிய மந்மதன் என்னைப் படுத்துவதில் மாத்ரமா த்ருப்தி யடைகிறான்! அப்பெண்மணியையு மல்லவோ வாட்டி வதைக்கிறான்? சரிதான்; பிறகு மேல் நடந்ததைக் கூறுவாய்.

விதூ:— தங்கள் ப்ரிய நாயகியின் நிலைமை இவ்வித மிருந்தவரையில், ஸகிகளால் அவளை ஆச்வாஸப்படுத்த முடியவில்லை. அத்தருணம் ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துக்கொண்டு செய்வ தறியாமல் திகைத்தனர். அவள் சிகித்ஸைக்கு வழிதெரியாமல் நம்பிக்கையை இழந்தனர். அப்போது எனக்கு ஒரு யுக்தி தோன்றியது. தங்களுடைய அநுக்ரஹத்தினால் நான் ஒருவர் கண்ணிலும் படாமல் மறைந்து நிற்கும் திரஸ்கரணி வித்தையை அறிவேனல்லவா? அதைக்கொண்டு அம்பர தலத்தில் நின்று அசரீரியைப்போல் "ஓ பெண்களே! உங்கள் ஸகியின் கஷ்டம் தெளிந்து அவளது இஷ்டம் பூர்த்தியாவதற்கு ஓர் உபாயம் சொல்லுகிறேன்; கேளுங்கள். பிரிந்த தம்பதிகளைக் கூட்டிவைக்கும் தெய்வம் மந்மதன். அத்தெய்வத்தைப் பக்தியுடன் ஆராதியுங்கள்; விரைவில் உங்கள் எண்ணம் கைகூடும்" என்று கூறினேன். இதைக் கேட்ட வாஸந்திகை தன் தோழிகளைக் கொண்டு ஸ்வஸ்திவாசநத்துக்கு வேண்டிய புஷ்பம் பழம் பக்ஷணம் முதலிய ஸாமக்ரிகளை வரவழைத்தாள்.

பகவான்:—[மந்தஹாஸத்துடன்] நண்பா! இது என்ன யுக்தி? உனக்கு வேண்டியது பழம் பக்ஷணம் முதலிய ப்ரஸாதங்கள். அவைகளுக்காகவே இத்தகைய சிறந்த உபாயத்தைச் செய்தாய்போலும்!

விதூ:—பிறர் காரியத்தை ஸாதிக்கச் செல்லும் ஸமயத்திலும் தங்கள் காரியத்தையும் சேர்த்து ஸாதித்துக்கொள்ளுவ தல்லவா புத்திசாலிகளின் திறமை!

பகவான்:—இருக்கட்டும் உன் ஸாமர்த்யமும் பெருமையும். மேலே அவள் ஸமாசாரத்தைக் கூறு.

விதூ:—அதன் பிறகு அவ்விடம் நிறைந்திருக்கும் பக்ஷண பலஹார ஸாமக்ரிகளைப் பார்த்தேன். மறைந்திருக்கும் என்னால் தாள முடியவில்லை. உடனே திரஸ்கரணி வித்தையை விட்டு, வநதேவதா மஹோத்ஸவ ஸம்பவத்தில் கலந்துகொண்டேன். ப்ரஸாதத்தை ஸ்வீகரிக்கும்பொருட்டு அங்கு மிங்கும் ஸம்ப்ரமத்துடன் உலாவி வந்தேன். அதை எவ்விதமோ அன்னை லக்ஷ்மியின் பரிசாரிகைகள் கண்டுகொண்டனர். பார்த்தா லென்ன? ஏதோ ப்ராம்ஹணன் ஸ்வஸ்திவாசநத்துக்கு வந்திருக்கிறான் என்று வாளா விருக்கலாகாதா? இவர்களுக்கு என்ன வந்தது? உடனே என்னைப் பிடித்துக் கெட்டியாகக் கட்டினர். இவர்களுக்கு நான் என்ன தீங்கு இழைத்தேன்? அத்துடன் விட்டனரா? என்னை இழுத்துக்கொண்டுபோய் அன்னை லக்ஷ்மீ தேவியின் முன்னிலையில் விட்டனர்.

பகவான்:—ஆஹா! இது என்ன கஷ்டம்? மஹா ப்ரமாத மல்லவோ நேர்ந்தது? பிறகு சீக்ரம் உரை.

விதூ:—தேவி கருணைக் கடல் அல்லவா? என் தீந ஸ்திதியைப் பார்த்தாள். அவள் மனம் கரைந்தது. என்னைக் கட்டி அழைத்துவந்த பெண்களை அதட்டிக் கோபித்துக் கட்டிலிருந்த என்னை அவிழ்த்து விடுமாறு கட்டளை யிட்டாள். பிறகு என்னை நோக்கி, "காலவா! என்ன ஸமாசாரம்? உனது ஸ்வாமியின் காரியத்தைச் சரிவரப் பழுதின்றிச் செய்தனையா? அக்கந்நிகையின் தாய் தந்தை பந்து ஜனங்கள் முதலியவர்களின் ஸம்மதியைப் பெற்றுவிட்டாயா? ஸம்பந்தமானது த்ருடமாகப் பிணைக்கப்பட்டதா?" என்று பல கேள்விகள் கேட்டாள்.

பகவான்:—[மிகவும் அச்சமும் பரபரப்பும் தோன்ற] என்னப்பா! நீ என்ன பதில் உரைத்தாய்?

விதூ:—'தாயே! ஏழையாகிய என்மேல் என் இவ்வளவு ஸந்தேஹம்? நான் அக்கந்நிகையையோ அவள் பந்து ஜனங்களையோ ஒருவரையும் அறியேன். ஏதோ காரியமாய் வநதேவதையின் ஆலய ஸமீபத்தில் வந்தேன். அவ்விடம் அத்யந்தம் ஸம்ப்ரமத்துடன் கூடிய மஹோத்ஸவத்தைக் கண்டேன். நானும் ப்ராம்ஹண கோஷ்டியில் சேர்ந்தால் தக்ஷிணை தாம்பூலம் பலஹாரம் கிடைக்குமென்று அவர்களுடன் கலந்து கொண்டேன். ஏதோ எனது போதாத காலம். இப்பெண்கள் 'உளவு பார்க்க வந்தவன்' என்று எண்ணித் தங்கள் ஸமீபம் இழுத்து வந்தனர்' என்றேன்.

பகவான்:—[புன்சிரிப்புடன்] சரிதான்; உன் சொல்லை, முத்துப்போன்ற பல்வரிசை யுடைய உனது தாய் நம்பினளா? அதற்கு என்ன உத்தர மளித்தாள்?

விதூ:—அடாடா! என்ன பயம்? "போதும் போதும் உன் நடனையும் பொய்யும் பாசாங்கும் பயமும். நீதான் புத்திசாலி. மற்றவர்கள் உன் வார்த்தையை நம்பி ஏமாறும் அறிவிலிகள் அல்லவா? ஒரு மேதாவி மாமரத்தில் பழுத்துக் குலுங்கும் பழங்களைக் கண்டான். நாவில் ஜலம் ஊறியது. அவற்றைப் பறிக்கும்பொருட்டு மரத்தில் ஏறினன். அதைக் கண்ட தோட்டக்காரன் 'ஏன் ஏறினய்?' என்று அதட்டினன். அதற்கு அவன், 'நான் பழங்களைப் பறிப்பதற்கா மரத்தில் ஏறினேன்? ஒருகாலும் இல்லை. மருந்துக்குப் பழுப்பு இலை வேண்டியிருந்தது; அதைப் பறிக்கும் உத்தேசத்துடன் ஏறினேன்' என்றனம். பழுத்த இலை கீழே விழாமல் மரத்தின் மேலே ஒட்டிக்கொண்டா இருக்கும்? அம்மேதாவியின் சொல்லைப்போலவே யிருக்கிறது உன்னுடைய காரணமும். அதிருக்கட்டும்; ப்ரபுக்கள் தாங்கள் மனம் போனவாறு செய்யும் சக்தியுடையவர்கள். புதிது புதிதான வஸ்துக்களிடத்தில் அவர்கள் மனம் செல்வது ஸஹஜம். அவர்கள் இச்சையைத் தடுக்க யார்தான் சக்தி யுடையவர்கள்? ஒன்று

189249

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற

கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

		சந்தாதாரர்களுக்கு ரூ. அ	மற்றவர்கட்கு ரூ. அ.
1.	ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8	7—8
2.	உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0-12	1—0
3.	உக்தி நிஷ்டாபரணோத்யோதம் ,,	0—8	0-12
4.	வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் ... (க்ரந்த லிபி)	1—0	1—8
5.	ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—8	0-12
6.	ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3	0—4
7.	ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0	3—0
8.	ஈஶாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழி பெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0	1—8
9.	ஸ்ரீ காமாஸிகாஷ்டகம், ஸ்ரீ வேகாஸேது ஸ்தோத்ரம் [க்ரந்த லிபி ; தமிழ் உரையுடன்]	0—7	0—8

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள்:—

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், மதராஸ் - 17.

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Regd. M. 4437.

ஸ்ரீ:

தமிழகத்தில் சிறவர்கட்கும் ஏனையோர்க்கும் வைதிக
லௌகிக வ்யவஹாரங்களைப் போதிப்பதில்
முன்னணியில் நிற்கும்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா.

இது இமய முதல் குமரிவரை ப்ரசுரமாகிவரும் ஒரு மாதப் பத்ரிகை.

இதில் எத்தகைய விளம்பரங்களும் தெளிவாகவும் சுத்தமாகவும்
அழகாகவும் குறைந்த சார்ஜில் செய்துகொடுக்கப்படும்.
விளம்பர விஷயங்களும், அதன் சார்ஜும்,
கீழே காணப்படும் விலாஸத்துக்கு
அனுப்பப்படவேண்டும்.

விளம்பரங்களுக்கு ஆர்டர்கள் தேவை.

[குறிப்பு] முன் பணம் அனுப்பப்பட்டாலன்றி விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட மாட்டா.

சார்ஜுகளின் விவரம்:—

ராப்பர் வெளிப்புறம்	பக்கம் 1-க்கு	மீ 1-க்கு	ரூ. 20.
,, உட்புறம்	,,	,,	ரூ. 15.
ஸஞ்சிகையின் உட்புறம்	,,	,,	ரூ. 10.

**ஒப்பந்த (CONTRACT) விளம்பரங்களுக்குக் கட்டணம்
இன்னும் குறைவாகும்.**

இங்ஙனம்:

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,
நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், மதராஸ்-17.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Q. H. Ct. 36, (Supply) Edited and Published by S. Vasudevacharia, 2, Mahalakshmi Street, Tyagarayanagar, Madras.

..No. M. 4437.

Arya Vaidya Vilasini Vaidya Sala,

H. O. CALICUT.

Estd. in 1921

[APPROVED BY THE GOVT. OF MADRAS.]

Proprietor and Chief Physician :—

K. NEELAKANTAN VAIDYAR, *Regd. Medical Practitioner.*

Branches :—1. No. 24, Nagappa Iyer St., Triplicane, Madras.
2. Chinnakadai St., Teppakulam Post, Tiruchirappalli.
3. Dindugal Road, Mathurai.

STOCKISTS :—1. Dr. Kerrison, Salem ; 2. Dr. Karunakara Menon, Vasantha Hospital, Salem, Velur ; 3. Vaidyam Mahadeva Swamy Iyer, Virudhunagaram ; 4. National Stores, Devakottai ; 5. V. R. Menon & Co., 111, Rastaspeth, Poona ; 6. Karaikkudi ; 7 Sri P. K. Balasubramania Iyer, Palani ; 8. Sri S. G. Krishna Iyer, Coimbatore Variety Hall Road ; 9. Dindugal ; 10. Erode ; 11. Aruppukkottai.

All kinds of Ayurvedic Treatments, Pizhichil, Dara, Navarakkizhi etc., undertaken. Success sure. Nursing home at H. O. and Branches. Treatment also undertaken at the patient's residence. Expert in Rheumatism, Paralysis, Brain fever, Appendicitis etc.

Many respectable gentlemen have tried our medicines and visited our Medical Factory, Medical Hall, Rare madicinal plants garden, Nursing Home etc. The names of some of the above said gentlemen who have given their kind testimonials are mentioned hereunder.

1. Sri A. S. Bharathan, G. M. Reuters & P.T.I., Bombay ; 2. Sri K. P. Gopala Menon, Bar-at-law, Madras ; 3. Sri M. C. B. Koman, I.C.S., Judge ; 4. Sri S. Y. Krishnaswamy I.C.S., Collector ; 5. K. Krishna Menon, Principal, Law College, Madras ; 6. Sri Kutty Krishna Menon, Govt. Pleader, Madras ; 7. Sri A. Mallikarjuna Rao, Medical Officer, Madras ; 8. Sri R. M. Mathew, Director of Public Helth, Madras ; 9. Sri M. K. Mookherjee, President, All India Ayurvedic Congress ; 10. Sri A. S. M. Nair, Commissioner, H. R. E. Board, Madras ; 11. Divan Bahadur T. Rangachariar, C. I. E., Madras ; 12. Sri Manjeri Rama Iyer, Advocate, Calicut ; 13. Sri K. M. Unnithan, I.C.S., Madras ; 14. Vaidyaratnam Sri P. S. Varier, Kottakkal, Madras.

OUR SPECIAL MAKES:—Panchavalkadi & Dasapushpadi Soaps for itches, scabbies & boils. PRASOOTHIKARISHTAM & PRASOOTHIKAMRITHA RASAYANAM best Tonic after delivery for women. GARBHA RAKSHINI PILLS for pregnant women.

In all the branches experienced Arya Vaidyans are in charge to look after.

Sri Neelakanta Vaidyar's frequent tour programme to branches & stockists will be published now and then in some of the Madras Dailies like the Hindu, Dinamani etc. for the information of the public.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street L. Kancheepuram. Edited and Published by P. S. Srinivasa Desikachariar, No. 2, Audiappa Mudali Street, Purasawakkam, Vepery, Madras - 7.

ஆஸ்திகர்களுக்கு அறிவிப்பு

ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபா என்னும் பெயர்கொண்ட ஸபை
சென்னையில் 1947-வருஷம் அக்டோபர் மாதத்தில்
ஸ்ரீ காஞ்சீ P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின்
தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிறது.

இந்த ஸபையின் மூலமாகத் தமிழ் லிபியிலும், தெலுங்கு லிபியிலும்
நம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்க ளெல்லாம் மிகவும் அழகிய முறையில்
அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகின்றன.

"ஸ்ரீராமாநுஜன்"

என்ற பெயரால் மாதப் பத்ரிகையும் தமிழ் தெலுங்கு உபய பாஷைகளிலும்
தனித்தனி நடத்தப்பட்டு வருகின்றது.

ஷை ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையில்

மொத்தமாக 250 ரூபாய் செலுத்துகிறவர்கள் பேட்ரன்கள்.

100 ரூபாய் செலுத்துகிறவர்கள் ஜீவிய சந்தாதாரர்கள்.

வருஷந்தோறும் (போஸ்டேஜ் உள்பட) 15 ரூபாய் சந்தா செலுத்துமவர்கள்
ஆர்டினரி மெம்பர்கள்.

ஆக இம்மூன்று வகுப்பிலும் சேர்ந்தவர்கள் மாதப் பத்ரிகைக்காகத்
தனிப்பட்ட சந்தா செலுத்தவேண்டியதில்லை.
மாதப் பத்ரிகை மாத்ரம் விரும்புமவர்களுக்கு

தமிழ்ப் பத்ரிகையின் வருஷச் சந்தா ரூ. 4.

தெலுங்கு பத்ரிகையின் வருஷச் சந்தா ரூ. 5.

மற்றும் இது ஸம்பந்தமான விவரங்களுக்கு விசேஷ விளம்பரம் தருவித்துப் பார்க்க.
கடிதப் போக்கு வரத்துகளுக்கும் மணியார்டர் அனுப்புவதற்கும் விலாஸம்:—

P. B. அண்ணங்கராசாரியர், க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

க்ரந்தமாலா ஆபீஸ் பதிப்புகளுக்கு விரிவான காட்லாக் வரவழைத்துப் பார்க்க. உடையவர், நம்பிள்ளை, தேசிகன், மணவாளமாமுனிகள் முதலான பூருவாசாரியர்களருளிச்செய்த ஸகல க்ரந்தங்களும், அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகள் இயற்றிய நாலாயிர திவ்யப் பிரபந்த வியாக்யானங்கள், ஸ்ரீ வசநபூஷண ஆசார்ய ஹ்ருதயாதி ரஹஸ்ய வியாக்கியானங்கள், ஸகல ஸ்தோத்ரபாட வியாக்கியானங்கள் மற்றும் பல ஸம்ப்ரதாய நூல்கள், பலவகை உபந்யாஸ நூல்கள், சரித்திர நூல்கள் இங்கே கிடைக்கும்.

மானேஜர்,

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.